For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மே 2023

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்

விலை : ரூ 60 • இதழ் 36



WWW.CHRISTIANHISTORICALSOCIETY.IN

9 788195 982004



Missionary Encampment near Sivagasi

# ஆசிரியர் சுவடு

கிறிஸ்துவுக்குள் அன்பான வரலாற்றுச் சுவடுகள் வாசகர்களே!, பராபரனாம் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். பராபரனுடைய பெரிதான கிருபையினாலே திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் பத்து அம்ச திட்டங்களின் ஒன்றான கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத ஆய்விதழ் இம்மாதம் முப்பத்தி ஆறாவது இதழாகும் வரும் ஜூன் மாதம் நமது இதழ் நான்காம் ஆண்டு துவக்கத்தில் இருக்கின்றது.

**பூர்வநாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான்; உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். (உபாகமம் 32:7)**

ஒவ்வொரு காலகட்டத்திலும் பல்வேறு வரலாற்று அறிஞர்கள் வரலாற்றை அதிக தியாகத்தோடும் அர்பணிப்போடும் தம் அடுத்த தலைமுறைக்கு மிகச் சிறந்த வழிகாட்டியாகவும் பொக்கிஷமாகவும் கொடுத்துள்ளனர். அதை போற்றுவதும் நம் அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்வதும் நம் மேல் விழுந்த தலையாய கடமையாகும். அந்த அளப்பரிய பணியை செய்ய அர்பணிக்கப்பட்ட இயக்கங்களுள் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கமும் ஒன்று.

கடந்த மூன்று ஆண்டுகளாக ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பின் கீழ் செயல்பட்டு வந்தது. இம்மாத முதல் அநேகர் கேட்டுக் கொண்டதன் மற்றும் விருப்பத்தின் பேரில் தலைப்புகள் இல்லாமல் செயல்படலாம் என நினைக்கின்றோம். உங்களுக்கு அருகில் உள்ள திருச்சபை வரலாறுகள், மிஷினரி வரலாறுகளை, கள ஆய்வுகளை செய்து தொடர்ந்து எழுத அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். இதுவரையிலும் நம்முடைய மாத இதழில் வெளி வராத கட்டுரைகளை எழுதவும், மக்கள் இன்றும் கேள்விப்படாத நிலையில் உள்ள வரலாற்று சம்பவங்களை கொண்டு செல்லும் நோக்கில் ஜெபத்துடனும், தரிசனத்துடனும் எழுத அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விடுமுறை நாட்களில் விடுமுறை வேதாகமப் பள்ளி மாணவ செல்வங்களுக்கு மிஷனெரி வரலாற்றுக் கதைகளை எடுத்து செல்ல திட்டமிட்டுளோம். பாராபரன் அதற்கு உதவி செய்வாராக.

திருச்சபைசரித்திரநூல்கள்மற்றும்நம்முடையபகுதியில்மகத்தானபணிசெய்தமிஷனெரிகளின்வரலாற்றுநூல்களைதொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம். ஒவ்வொரு மாதமும் மாத இதழினை வெளிக்கொண்டுவருவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, சந்தா செலுத்தாதவர்கள் செலுத்த கேட்டுக்கொள்கிறேன். தேவைகள் அதிகம் உண்டு, தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக்கொள்ளுங்கள். சந்தா, நன்கொடைகளை அனுப்ப இதழின் பக்கங்களிலிருக்கும் வங்கிக் கணக்குகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நண்பர்களுக்கு இப்புத்தகத்தை அறிமுகப்படுத்தி அவர்களை சந்தாதாரர்களாக்குங்கள். தேவைகள் சந்திக்கப்படவும் தொடர்ந்து வரலாற்று ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

பாரபரனின் பணியில்

*Manna Selvakumar*

G Pay

**சுஜித் ரெக்ஸ்**
வடிவமைப்பு

**மன்னா செல்வகுமார்**
ஆசிரியர்

**தொடர்புகொள்ள +91 91767 80001**

கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: Tinnevelly Christian Historical Society
A/c Number : 1748 020000 3684
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Tinnevelly Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்

ஆசிரியர்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
tchsportal.co.in

christianhistorical@gmail.com

# உள்ளே...

04 நற்செய்திப்பணியின் ...
சாமுவேல் ஆபிரகாம், முன்னாள் மிஷனெரி

07 சங்ககிரி மலைக் ...
பர்னபாஸ், சேலம் வரலாற்றுச் சங்கம்

09 மிஷனரிகளின் அணு..
ஜான் ஞானராஜ், ஆசிரியர்

11 தலை சிறந்த பணி...
Rev. அகஸ்டஸ் செபத்தையாபுரம்

15 கிளாரிந்தா...
ஆசிரியர்

19 இதயத்தைக் கவர்ந்த...
ரோடா அலெக்ஸ்

22 துப்புய் பாதிரியார்...
ராஜ்ஜா

25 புரட்சிப் பெண்...
ஜான்சி பால்ராஜ், ஆசிரியர், திருநெல்வேலி

31 நற்செய்திப்பணியின் ...
நெல்லை ஜெஸி மணாளன் கோயம்புத்தூர்



# நற்செய்திப்பணியின் தேவையும், இன்றைய மிஷனெரி அணுகுமுறைகளும்

**சாமுவேல் ஆபிரகாம் வி.**


இந்திய மக்கள் தொகையில் கிட்டத்தட்ட மூன்று சதவிகிதமும் (3%), உலக மக்கட்தொகையில் மூன்றில் ஒரு பங்குமே (33%) இன்றைய கிறிஸ்தவரின் எண்ணிக்கை என்றால், நற்செய்திப் பணியின் தேவை இன்னும் எவ்வளவு அவசியம் என்பது மிகவும் தெளிவாகிறது.

**மாறுகின்ற சூழ்நிலையும் மாறவேண்டிய அணுகுமுறைகளும்**

கடந்த சில நூற்றாண்டுகளாக கண்டங்கள், கடல் மற்றும் நாடு கடந்த அருட்பணி மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தது; அப்படித்தான் பல மிஷனரிகள் நம்மிடையே வந்து மாபெரும் காரியங்களைச் சாதித்தனர். அதன் பின்னர், அந்தந்த நாடுகளிலே கலாச்சாரம் கடந்த அருட்பணிக்கு விசேஷ முக்கியத்துவம் தரப்பட்டது. 1980-களிலே நம் தேசத்தின் பல்வேறு மொழி மற்றும் இனமக்கள் மத்தியிலே சபைகள் பெருக ஆரம்பித்ததால், சுதேச அல்லது உள்ளூர் ஊழியர்களின் ஈடுபாடு அதிகமானது. 1990-களிலிருந்து உள்ளூர்ச் சபைகள் தங்கள் சமுதாயங்களைச் சந்திக்க ஆரம்பித்தனர் (Manoharan.J.N). பத்தாண்டுகளுக்கு முன்னரே இந்தியாவின் ஒவ்வொரு மாவட்டத்திலும் சபைகள் எழும்பியிருந்ததை நாம் காணமுடிந்தது. ஒருவேளை இன்றைய கணிப்பின்படி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் கிறிஸ்தவ விசுவாசிகள் இருக்கலாம் என்று பொதுவாக நம்பப்படுகிறது.

அப்படியானால், நாம் தூரமான இடங்களுக்கு மிஷனெரிகளை அனுப்புவது அவசியமா? அல்லது சந்திக்கப்படாத பகுதிகள் மற்றும் மக்கள் கூட்டங்களுக்கு அருகிலுள்ள சபைகள் மற்றும் விசுவாசிகளுக்கு சுவிசேஷ தரிசனத்தைக் கொடுத்து, அதற்கான உதவிகளைச் செய்வது இன்றையத் தேவையா?

வெளியூரிலிருந்து வரும் மிஷனெரி அல்லது ஊழியர் என்னும் அடையாளம் இன்று பல இடங்களிலே ஆபத்தானதாக மாறிவிட்ட சூழலிலே, நமது அருட்பணி அணுகுமுறையிலும் மாற்றம் தேவையே. ஒருவேளை தாம் ஆங்காங்கு கட்டி எழுப்பியுள்ள உள்ளூர்ச் சபைகளுக்குரிய உரிமையையும் இடத்தையும் மிஷனெரிகள் விட்டுக்கொடுப்பதற்காக ஆண்டவர்



அனுமதித்த சூழ்நிலை இதுவே என்றும் நாம் நினைக்கத் தோன்றுகிறது.

### சபை ஊழியமும் நற்செய்தி ஊழியமும்

2000ம் ஆண்டின் கணக்கின்படி, இவ்வுலகின் சந்திக்கப்படாத மக்களில் பாதிப்பேர் கிறிஸ்தவர்களைச் சுற்றிலுமே வாழ்கிறார்கள். மிஷனெரிகளிலோ 75% பேர் சந்திக்கப்பட்ட மக்களுக்குள்ளேயே பணிபுரிகிறார்கள். (Barrett & Johnson, 2000)

ஒருபக்கம் நாம் சந்திக்கப்படாத மக்களுக்குள் கலாச்சாரம் கடந்த ஊழியர்களை அனுப்பவேண்டும் என்றாலும், இன்னொரு பக்கம் நமக்கெட்டும் தூரத்தில் நம்மைச் சுற்றிலும் உள்ள ஆண்டவரை அறியாத அல்லது ஏற்றுக்கொள்ளாத மக்களுக்காக நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதும் சரிசமமாக யோசிக்கப்படவேண்டிய ஒரு விஷயம்.

அதாவது, நாம் இயேசுவின் உண்மை அடியவர்களாக, நமது தனிப்பட்ட சாட்சியின் வாழ்வைக் காத்து, நம் சபை வாழ்வு **'சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாக'** (1 தீமோ 3:15) விளங்கும்போது, நம்மைச் சுற்றியுள்ளோர் நமது இரட்சகரிடமாய் ஈர்க்கப்படமுடியும். அதாவது, கிறிஸ்தவ வாழ்விலே சபை ஊழியமும் நற்செய்தி ஊழியமும் சரிசமமான முக்கியத்துவத்துடன் அணுகப்படவேண்டும். அப்படியானால் தான், புறப்பட்டுச் செல்லும் மிஷனெரியும் சரியான அணுகுமுறையும் வல்லமையும் பெற்ற ஊழியராக ஜொலிக்கமுடியும். தரமுள்ள சபையே தரமுள்ள ஊழியர்களை அனுப்பமுடியும்! நற்செய்திப்பணி என்பது சாட்சியிழந்த சபை வாழ்வின் பதிலியாக முடியாது. ஏனென்றால், கிறிஸ்துவைப் பின்பற்றும் சீடரின் அல்லது சபைகளின் சாட்சியே நற்செய்திப்பணி.

### இயேசுவின் நற்செய்திப்பணி எப்படி இருந்தது?

பரலோகம் விட்டு பூலோகம் வந்தார்; ஒரு குறிப்பிட்ட மக்கள் மத்தியில் வளர்ந்தார், சுவிசேஷம் அறிவித்தார், எதிர்காலத் தலைவர்களைத் தெரிந்துகொண்டார், தம்மைப் பின்பற்றுவோரைச் சீடராக்கினார், அவர்களுடன் வாழ்ந்தார், தம்மையே பலியாக ஈந்தார், உயிருடன் எழுந்து, அவர்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்தினார், அவர்களுக்குத் தேவையான வரங்களை அளித்தார், தமது சாட்சிகளாக அவர்களை ஏற்படுத்தி, மறுபடியும் வருவேன் என்ற வாக்குறுதியுடன் மூன்றரை ஆண்டுகளில் தம் பணியை நிறைவு செய்து கடந்துசென்றார். இந்தச் சிறுகூட்டமான சாதாரண சீடர்களே அவரது பரமேறுதலுக்குப்பின் இந்த அருட்பணியை நிறைவேற்றி, வரலாற்றிலேயே மிக வேகமாக வளர்ந்த சபைகளை உருவாக்கினார்கள். (பார்க்க: அப் 2:41, 47; 4:4; 5:14; 6:1, 7; 8:12, 39; 9:31, 35, 42; 10:48; 11:1, 21, 24; 12:24).

அதாவது, பரலோகத்திலிருந்து வந்த அந்த ஒப்பற்ற மிஷனெரியைக் காட்டிலும் மாபெரும் ஊழியத்தை அவரால் உருவாக்கப்பட்ட சீடர்கள் அல்லது **'உள்ளூர்த் தலைவர்கள்'** செய்தார்கள் - அதாவது அவர் உருவாக்கிச் சென்ற **'சபை'** செய்தது!

### மிஷனெரிப் பணியும் பணித்தளச் சபைகளும்

பேராயர் நியூபிகின் இப்படிச் சொல்கிறார்: **"நற்செய்திப்பணி குறித்த உணர்வற்ற சபையும், சபை குறித்த உணர்வற்ற நற்செய்திப்பணியும் பயமுறுத்தும் பயனற்ற பேருருவங்கள்!"** (Newbegin, 1953).பேராயர் அசரியா ஒரு மிஷனெரியா அல்லது சுதேச சபைத்தலைவராளன்பது ஒரு ஆர்வத்தைத் தூண்டும் கேள்வி! அவர் ஒரு அருட்பணியாளராய்ச் சென்று, பணித்தளத்திலே பேராயரானவர்; ஆங்கிலேயர்களைப் பொறுத்தவரையில் - ஒரு முதல் இந்திய பேராயராகத் திறமை பெற்றிருந்த சுதேச சபைத்தலைவர்!

ஆனால், மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், ஒரு சுதேச இந்தியரின் தலைமையின் கீழ் தோர்ணக்கல் பகுதியின் பல சபைகள் ஒருங்கிணைக்கப்பட்டதும் (1912), அருகிலிருந்த C.M.S, S.P.G மற்றும் பல்வேறு மிஷனெரிப் பணித்தள சபைகள் அவர்களுடன் இணைந்துகொண்டனர். ஆத்துமாக்களை தேவனிடம் ஈர்த்துக்கொண்டிருந்த அந்த ஊழியம், இப்போது சபைகளை ஈர்க்க ஆரம்பித்தது! பின்னர், மூன்று புதிய பேராயங்கள் இதிலிருந்து வந்தது மாத்திரமல்ல, இன்று இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான விசுவாசிகளைக் கொண்டுள்ளது தோர்ணக்கல் பேராயம். (https://dornakal.csi1947.com/) இது இந்தப் பேராயத்தை உருவாக்கியதாக சொல்லும் மிஷனெரி இயக்கத்தின் நூற்றாண்டுகால வளர்ச்சியைக் காட்டிலும் பல மடங்கு அதிகமானது என்பதை நாம் நினைவிலே கொள்ளவேண்டும்! இந்த வரலாற்று நிகழ்வு இந்திய மிஷனெரிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு, பத்தாண்டுகளுக்குள் நிகழ்ந்தது. ஆம், நற்செய்திப்பணி சபையை நாட்டுகிறது; ஆனால், சபைப்பணியே அதனை வளர்ந்து பெருகச் செய்கிறது.

ஆனால், துக்கமான விஷயம் என்னவென்றால், நாம் வரலாற்றிலே அதிகமாய்க் கொண்டாடும் அந்த நிகழ்விற்குப் பின்னர் எழும்பிய பலபணித்தளச் சபைகள் தற்சார்புள்ள அமைப்புகளாய் மலர (அனுமதிக்கப்பட?) வில்லை. இதினாலோ என்னவோ, நாம் நம் பணித்தள சபைகளின் தொடர் வளர்ச்சிகளையும் அதிகமாய்க் காணமுடியவில்லை. **சபையே அருட்பணிக்கான கருவி; சபையே அருட்பணியின் இலட்சியம்; சபையே ஒரு வளரும் உயிரி!** நாம் நாட்டப்போகும் சபைகளைக் குறித்த தெளிவான தரிசனமில்லாமல் மிஷனெரிப் பணியில் ஈடுபடுவது மிகவும் பிழையானதொரு அணுகுமுறை, அது பல உள்ளூர் 'அசரியாக்களை' நாம் இழக்கக் காரணமாவதுடன், சபை வளர்ச்சியையும் தடைசெய்யும்.

### பவுல் எப்படி அருட்பணியை நிறைவேற்றினார்?

1. சபையிலே உருவாக்கப்பட்டார், ஊழியம் செய்தார் (அப். 11:25-30;13:1)
2. ஆண்டவரால் அழைக்கப்பட்டார், சபையினால் வழி அனுப்பப்பட்டார் (அப். 13:2-4)
3. தம் சொந்த மக்களிடையேயும், ஆண்டவரால் ஆயத்தமாக்கப்பட்டிருந்த மற்றவர்களிடமும் சுவிசேஷம் அறிவித்தார் (அப். 13:5, 16, 43-48)
4. விசுவாசித்தவர்கள் சபையாக மாறினார்கள்
5. பாடுகளின் மத்தியிலே ஊழியம் செய்தார் (அப். 13:50; 14:5,19)
6. கடிதங்களையும் மற்ற தலைவர்களையும் அனுப்பி, விசுவாசிகளைப் பெலப்படுத்தினார் (கலா.1:2; பிலி. 2:23, 25, 28)
7. மறுபடியும் சபைகளை சந்தித்து, விசுவாசத்தில்

உறுதிப்படுத்தினார் (அப். 14:21-23)

8. ஜெபித்து, உள்ளூர் சபைப் பொறுப்பாளர்களை ஏற்படுத்தினார்.
9. ஆண்டவரிடம் அவர்களை ஒப்படைத்துக் கடந்து சென்றார்.
10. சபை அமைப்புக்கான வழிகாட்டி விதிகளை உருவாக்கினார் (தீமோத்தேயு மற்றும் தீத்து நிருபங்கள்)

சுவிசேஷ ஊழியம், சபைப்பணி, கடிதங்களை எழுதுதல், தலைவர்களை உருவாக்குதல் ஆகியவற்றை தம் கூடாரப்பணியுடன் செய்தார். பவுலின் முதல் மிஷனெரிப் பயணம் ஓரிரு வருடங்களிலேயே நிறைவு பெற்றது. எபேசு வட்டாரத்தில் மூன்றே வருடங்களில் அவரது பெரும் தாக்கத்தை உணரமுடிந்தது (அப். 19). இதற்கெல்லாம் காரணம் சபையைக் குறித்த பவுலின் தெளிவான பார்வையே!.

**பணித்தளச் சபைகளைக் கையாளுதல்**

ஒரு மிஷனெரி அல்லது மிஷனெரி இயக்கம் தன்னால் உருவாக்கப்படும் முதல் தலைமுறை சபைகளையும் உள்ளூர் விசுவாசத் தலைவர்களையும் எப்படிக் கையாள்கிறது என்பதை பொறுத்தே அதன் தொடர் வெற்றி அமைந்துள்ளது. பணித்தளங்களிலே எந்தவொரு தெளிவான நோக்கமுமில்லாமல் சில அருட்பணி இயக்கங்கள் தங்கள் 'பணி'களைத் தொடரும்போது, அருட்பணி ஆட்சிப்பணி ஆகிறது! வயதை எட்டிவிட்ட தம் பிள்ளைகளின் திருமணத்தை ஏதோவொரு காரணம் சொல்லி, தள்ளிப்போடும் பெற்றோரைக் குறித்து நாம் என்ன சொல்வோம்? சந்திக்கப்படாத மக்களைக் குறித்த பாரம் நம்மை அழுத்தும் போதெல்லாம் நாம் கேட்கவேண்டிய இன்னொரு முக்கியக் கேள்வி – சந்திக்கப்பட்டு சபைகளாகிவிட்ட நம் சக விசுவாசிகளைக் குறித்த தேவசித்தம் முழுமையாய் நிறைவேற நாம் எடுக்கும் முயற்சிகள் என்ன?

பல சுதேச சபைகளின் 'பேராயர் அசரியாக்கள்' சில மிஷனெரிச் சங்கங்களிலே '**சுதேச ஊழியர்**'களாகவே ஓடி, தங்கள் காலத்தை முடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? சில அற்புதமான '**தோர்ணக்கல் பேராயங்கள்**' நம் நாட்டின் பல பகுதிகளிலே '**பணித்தளங்களாகவே**' தங்கள் பயணத்தைத் தொடர்கின்றன என்பதை நாம் யோசித்திருக்கிறோமா?

மாறிவரும் சூழ்நிலைகளின் மத்தியிலே, '**நாங்கள் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர், ஆண்டவரே?**' என்று கேட்டு, வேதாகம அணுகுமுறைகளை நம் ஊழியங்களாக்கும்போது மட்டுமே நாம் தேவசித்தத்தை நிறைவேற்றுகிறோம்.

**'என் சபையைக் கட்டுவேன் என்ற இயேசு பேசுகின்றார்!'** தொடரும் நற்செய்திப் பணியுடன்... நம் (சபைகளின்) சாட்சி வாழ்வை சீரமைப்போம்; நம்மைச் சுற்றியுள்ளோருக்காகவும் பாரம் கொள்வோம்; நம்மால் உருவாக்கப்பட்ட பணித்தளச் சபைகளை முழுமையான வளர்ச்சிக்காய் விடுவிப்போம்.

**சாமுவேல் ஆபிரகாம் வி.**

ஒரு முன்னாள் மிஷனெரி மற்றும் ஊழியர் பயிற்சியாளர். தற்பொழுது மேய்ப்பரின் பயிலகத்தில் பணிபுரிகிறார். உள்ளூர்ச் சபைகளின் மறுமலர்ச்சியும், தலைவர்களை உருவாக்குதலும் அவரது இன்றைய பாரங்கள்.

# வரலாற்றுச் சுற்றுப்பயணம்







மிஷன் சுற்றுப்பயணமாக மூன்றுநாள் ஒரே குடும்பத்தை சேர்ந்த கோவை, சென்னை மற்றும் பெங்களூரில் இருந்து நமது திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட பகுதிகளில் இறைப்பணியாற்றிய மிஷனெரிகள் நினைவிடங்களையும் அவர்கள் உருவாக்கிய பணித்தளங்களையும், ஆலயங்களையும், இன்றைக்கு இருக்கும் திருச்சபை வளர்ச்சிப் பணிகளையும் பார்வையிடுவதற்கு வந்திருந்தார்கள் அவர்கள் குடும்பத்திற்கு வாழ்த்துக்களையும் வரலாற்றுச் சங்கம் சார்பாக நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சேலம் மாவட்டம் சங்ககிரி மலைக் கோட்டை அடிவாரத்தில் அமைந்துள்ள ஆங்கிலேயர்களின் கல்லறைகள்.**

**வரலாற்றின் வாசல்**

கி.பி. 1792 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களுக்கும் திப்புவின் படைகளுக்கும் இடையே மூண்ட மூன்றாவது மைசூர் போரின் இறுதியில் ஏற்பட்ட ஸ்ரீரங்கப்பட்டணம் சமாதான உடன்படிக்கையின்படி ஒருங்கிணைந்த சேலம் மாவட்டம் உட்பட ஒரு மிகப்பெரிய நிலப்பகுதி ஆங்கிலேயர்கள் வசம் வந்தது. அப்பொழுது சேலம் மாவட்டத்தில் இருந்த இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த சங்ககிரி மலைக்கோட்டையை தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்து ஆங்கிலேயர்கள் அதை பலப்படுத்தி காவல் செய்துவந்தனர். ஏனெனில் இந்த மலைக்கோட்டையை ஒட்டி அமைந்துள்ள நிலப்பகுதி ஒரு முக்கியமான போக்குவரத்து வழித்தடமாக விளங்கியது. சேலம் மற்றும் பாராமஹால் பகுதிகளின் பாதுகாப்பிற்கு இந்த மலைக்கோட்டை படையரண் (Fort Garrison) முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருந்தது.

**சங்ககிரி துருகம் (Sankaridroog)**

கி.பி.1792 ஆம் ஆண்டு முதல் இந்த சங்ககிரி துருகம் கோட்டை படையரண் காப்பாளர்களாக ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் 22 ஆவது மெட்ராஸ் படைப்பிரிவு (22 nd Madras Battalion) தளபதி லெப்டினெனன்ட் கர்னல் ஸ்டூவர்டு (Lt.Col.Stuart) தலைமையில் ஒரு பலம்வாய்ந்த பெரும்படை இந்த சங்ககிரி மலைக் கோட்டை கொத்தளத்தில் நிலைகொண்டிருந்தது. பாடிவீடுகள் (Tent) அமைத்து படைவீரர்கள் மலைக்கோட்டை அடிவாரத்திலும் தங்கியிருந்தனர். சேலம், நாமக்கல், ஆத்தூர் போன்ற கோட்டை கொத்தளங்களுக்கும் சங்ககிரி துருகம் தலைமையிடமாக விளங்கியது.

**கோட்டை காப்பாளர்களின் கல்லறைகள்**

சங்ககிரி மலைக்கோட்டை கொத்தளத்தை காவல் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த ஆங்கிலேய இராணுவ அதிகாரிகள் சிலர் நோய்வாய்ப்பட்டு இறந்தபொழுது அவர்கள் இங்கே இந்த கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டனர். அவர்களின் நினைவாக உயரமான பிரமீடு கோபுரம் போன்ற கல்லறை ஸ்தூபிகள் (Huge Obelisks) எழுப்பப்பட்டது.

இந்த கல்லறைத் தோட்டத்திற்கு பாதையாக பிரிட்டீஷ் கவுன்சில் முயற்சியால் சங்ககிரி பழைய எடப்பாடி சாலையின் இடதுபுறமாக கல்லறைத் தோட்டத்தை நோக்கி ஒரு 20 அடி சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**சேலம் வரலாற்றுச் சங்கத்தின் முயற்சிகள்**

சேலம் வரலாற்றுச் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று கடந்த 18-2-2008 அன்று லண்டனிலிருந்து செயல்படும் தெற்கு ஆசிய பிரிட்டீஷார் கல்லறைகள் பாதுகாப்பு அமைப்பின் (British Association for Cemeteries in South Asia - B.A.C.S.A.) நிர்வாகி திரு.ஹென்றி பிரவுன் ரிக் (Mr.Henry Brown Rigg) இந்த கல்லறைத் தோட்டத்திற்கு விஜயம் செய்து பிரிட்டீஷார் கல்லறைகளை ஆய்வு செய்தார்.

அவரது முயற்சியால் அந்த அமைப்பின் உதவியுடன் கடந்த 2008 ஜீலை - அக்டோபர் மாதங்களில் இந்த கல்லறைத் தோட்டத்திற்கு சுற்றுச் சுவரும் கேட்டும் சேலம் வரலாற்றுச் சங்கம் அமைத்துக் கொடுத்தது.

## சங்ககிரி மலைக் கோட்டை அடிவாரத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க பிரிட்டீஷ் படையரண் கல்லறைத் தோட்டம்

**(Sankardroog Fort Garrison Cemetery)**



கடந்த 19-7-2011 ல் நியூசிலாந்து நாட்டிலிருந்து தனது முன்னோர்களின் கல்லறைகளைத் தேடிவந்த திருமதி.ஜீன் மெண்டிஸ் டீ ரொசாரியோ (Mrs.June Mendez de Rosario) என்பவர் இந்த கல்லறைத் தோட்டத்திற்கு விஜயம் செய்து இங்கே அடக்கமாகியுள்ள தனது முப்பாட்டி திருமதி.மார்கரெட் பர்ஜெஸ் (Mrs.Margaret Burgess) என்பாரின் கல்லறையில் மலரஞ்சலி செலுத்தினார். இவைகள் இந்த கல்லறைத் தோட்டத்தின் சர்வதேச முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தின. இந்த அயல்நாட்டு அம்மையாரின் அஞ்சலி சுற்றுலாவில் (Homage Tour) சேலம் மாவட்டத்தில் தேவைப்பட்ட எல்லா உதவிகளையும் சேலம் வரலாற்றுச் சங்கம் செய்துகொடுத்தது.

அதேபோல கடந்த 11-11-2017 ல் தெற்கு ஆசிய பிரிட்டீஷார் கல்லறைகள் பாதுகாப்பு அமைப்பின் வாழ்நாள் உறுப்பினர்களான தம்பதியர் திரு.பிரயான் ரசல் (Mr.Brian Russell) மற்றும் திருமதி. நிர்மல் ரசல் (Mrs.Nirmal Russell) ஆகியோர் சேலம் வந்து இந்த சங்ககிரி துருக மலையடிவாரத்தில் உள்ள இந்த கல்லறைத் தோட்டத்தை ஆய்வு செய்து திரும்பினர். இவர்களின் வரலாற்றுத் தேடல் பணிகளில் சேலம் வரலாற்றுச் சங்கம் உதவியது.

**நினைவுச் சின்னங்கள் அழிந்தாலும் அதன் பதிவுகள் பேசும்**

நான் முதன்முதலில் இந்த கல்லறைத் தோட்டத்தைப் பார்த்த அன்று (6-5-2007) அதிர்ச்சியில் உறைந்தேன். ஏனெனில் அங்கு பார்த்த காட்சிகள். அங்கே அனைத்து கிரானைட் கல்லறை தலைக் கற்களும் பெரும்பாலும் உடைக்கப்பட்டிருந்ததையும், பல கல்லறைகளின் சாசன கல்வெட்டுகள் அகற்றப்பட்டிருந்ததையும், அனைத்து செங்கல் கட்டுமானங்களும் சேதமடைந்திருந்ததையும், கண்டேன். சுற்றுச் சுவர்கள் சேதமுற்று, கழிப்பிடமாகவும், பன்றி வளர்க்கும் இடமாகவும் இது இருந்தது அன்று. அதனால்தான் அன்றே இந்த கல்லறைத் தோட்டத்திற்கு சுற்றுச் சுவரும் கேட்டும் அமைக்க அன்றே முடிவெடுத்தேன். அது அடுத்த வருடமே (2008) மெய்ப்பட்டது. BACSA அமைப்பிற்கு நன்றி.

**துரத்தும் மரணம்**

சென்னை மாகாண சுதேச காலாட் படையின் ஏழாவது படைப்பிரிவின் முதல் பட்டாளத்தின் இடைநிலை இராணுவ அதிகாரி திரு.வில்லியம் ஆஷ் என்பவரின் கல்லறை ஸ்தூபி கோபுரம். இவர் தனது 22வயதில் கோட்டை கொத்தள காவல்பணியில் நோய்வாய்ப்பட்டு அகால மரணமடைந்த இளைஞன். இவரது நினைவிற்கு இவரது படைப்பிரிவில் உடன் பணியாற்றிய அதிகாரிகள் எழுப்பிய உயர் கோபுரம் இது:

வாழ நினைத்தாலும் வாழமுடியாது. கல்லறைத் தோட்டத்திற்குள் நுழைந்த உடனே இடதுபுறம் உயர்ந்த ஸ்தூபி கல்லறை கோபுரம். இது மலைக் கோட்டை காப்பாளர்களாக இருந்த பிரிட்டீஷ் இராணுவத்தின் இடைநிலை அதிகாரி ஒருவரின் கல்லறை. **'ஒரு அழகான இளம் மனைவியை தவிக்கவிட்டுவிட்டு இந்குவந்து இறந்துபோன ஒரு அன்பான கணவன், எல்லாரிடம் அன்புடனும், மரியாதையுடனும் பழகிய நண்பன்.'** என்று இவரைப் பற்றி சொல்கிறது.

இவரது முதல் மனைவி திருமதி.மினர்வா, தரங்கம்பாடியிலே கர்னலாக இருந்த திரு.முகுல்தார்ப் என்பவரின் இளைய மகள். இவள் ஆரணியிலே தனது 17ஆவது வயதில்



மரணமடைந்தாள். இவளது மரணத்திற்குப் பின் வேறு ஒரு இளம் பெண்ணைத் திருமணம் முடித்த இராபர்ட் தனது 28ஆம் வயதில் சங்ககிரி துருகத்தில் நோய்வாய்ப்பட்டு இறந்தார். வாழ நினைத்து வாழ்ந்தாலும் மரணம் இவர்களை துரத்தியது ஏனோ? இப்படி இந்த உயர்ந்த ஸ்தூபிகள் ஒவ்வொன்றும் ஒரு சோக கதையைச் சொல்கிறது.

**பால்பிள்ளை புத்திரி தாய் அம்மாள்**

திரு.S.பால்பிள்ளை என்ற தமிழ் சீர்திருத்த கிறிஸ்தவரின் 3 வயது மகளின் கல்லறை. சேதமடைந்த கற்சிலுவையின் நடுவில் எழுதப்பட்ட எழுத்துக்கள். உடைத்தவர்களால் எழுத்துக்களை சிதைக்க முடியவில்லை.

**அதிசய கல்லறைத் தோட்டம் :**

'கொங்கு நாட்டின் தலைநகர் சங்ககிரி வரலாறு' என்ற நூலில் இந்த கல்லறைத் தோட்டத்தின் வரலாறு, அதன் வரலாற்று கல்லறைகள் பற்றி பேசப்படுகிறது. நான்கு உயர்ந்த ஸ்தூபி கோபுர கல்லறைகள் ஒவ்வொன்றும் 20அடிக்கு மேல் உயரமானவை. இதில் இரண்டு ஸ்தூபிகளில் மாத்திரம் சாசன கல்வெட்டுகள் உண்டு. மற்ற இரண்டிலும் கல்வெட்டுகள் இல்லை, இருந்தாலும் இவைகளும் பிரிட்டீஷ் இராணுவ அதிகாரிகளின் கல்லறைகளாக இருக்கக்கூடும். இந்த நான்கு உயர்ந்த ஸ்தூபி கோபுரங்களில் ஒன்று சமீபத்தில் விழுந்துபோனது (Feb.2019). இவைதவிர இரண்டு சிறியரக ஸ்தூபி கோபுர கல்லறைகளும் உண்டு அவைகளின் சாசன கல்வெட்டுகள் களவாடப்பட்டுள்ளது. சுற்றுச் சுவரும் கேட்டும் கொண்ட இந்த கட்டுமானங்கள் மிகவும் சேதமுற்று காணப்படுகின்றன.

இந்த ஸ்தூபி கல்லறை கோபுரங்கள் அனைத்தும் வெறும் மண் மற்றும் செங்கல் கொண்டே இவ்வளவு உயரத்திற்கு கட்டப்பட்டுள்ளது; மேற்பூச்சாக மட்டும் சுண்ணாம்புக் காரை கலவை பூசப்பட்டுள்ளது . 200 ஆண்டுகளைத் தாண்டி இவைகள் நின்றுகொண்டிருப்பது அதிசயமே. பற்பல அதிசய வரலாற்றுச் செய்திகளை இன்னமும் தனக்குள் மறைத்து வைத்திருக்கும் இந்த கல்லறைத் தோட்டம் ஒரு சிறப்பான வரலாற்று ஆய்விடம் என்றால் அது மிகையாகாது.

**ஜே. பர்னபாஸ்**
சேலம் வரலாற்றுச் சங்கம்

# மிஷனெரி பணி உலகில் தலை சிறந்த பணி.

Rev. Dr. B. அகஸ்டஸ் பால்பாண்டியன்
செபத்தையாபுரம்

இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோசத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் ரட்சகர் உங்களுக்காக தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் என்று லூக்:2;11 இல் வாசிக்கிறோம். எனவே நற்செய்தி என்பது இயேசுவின் பிறப்பு செய்தி ஆகும். நமது இல்லத்தில், உள்ளத்தில், திருச்சபையில் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவருரிடமும் இயேசு பிறப்பதை குறிக்கும். இந்த செய்தியையே ஈராயிரம் ஆண்டுகளாக அறிவிக்கப்பட்டு வருகிறது. இன்னும் அறிவிக்கப்படுகிறது.

இந்த இயேசுவை சமாதானத்தின் பிரபுவாக, ஆறுதல் கொடுக்கும் உலகின் மீட்பராக, மறுவாழ்வுக்கு அழைத்து செல்லும் வழியாக, பாடுபடும் மனுக்குலத்தின் பிரதிநிதியாக திருமறை போதிக்கிறது. எனவே இன்றைய உலகிற்கும் நற்செய்தி பணி மிக அவசியமானதாக இருக்கிறது. என்னென்ன வகைகளில் நற்செய்தி பணி தேவை என்பதனை முதலில் அறிவோம்.

சமாதானத்தை உங்களுக்கு வைத்து போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு தருகிறேன் என்று இயேசு கூறினார். இன்றைய உலகின் அடிப்படை தேவை சமாதானம் ஆகும். தனி மனித வாழ்வில், குடும்ப வாழ்வில், திருச்சபை வாழ்வில், சமூக வாழ்வில் இன்று சகல வசதிகளோடு மனிதன் வாழ்ந்தாலும், அவன் சமாதானம் இல்லாதவனாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பது மறுக்க முடியாத உண்மை ஆகும். இதற்கு காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கலாம் ஆனால் அவர்கள் உள்ளத்தில் கிறிஸ்து இன்னும் பிறக்கவில்லை என்று திட்டமாக கூறலாம். நற்செய்தியாகிய இயேசுவின் தகவுகளான அன்பு. பொறுமை, தாழ்மை மன்னிக்கும் பண்பு, இச்சையடக்கம், தயவு, சாந்தம் துயரத்தை ஏற்கும் மனம் போன்றவை ஒருசிலரை தவிர பெரும்பான்மை மக்களிடம் காணக்கிடைக்கவில்லை என்பதை உறுதியாக கூறலாம். எனவே நற்செய்தி பணி இன்றும் அடிப்படை தேவை என்றால் மிகையில்லை.

### போலி நற்செய்தி:

உலகில் காணப்படும் எல்லா பொருட்களுக்கும் தரம் தாழ்ந்த போலிகள் கண்டுபிடிக்கப்பட்டுப் சந்தைக்கு வருகின்றன. இதனால் எந்த பொருள் தரமிக்கது? எது போலியானது என்பதை கண்டுபிடிப்பது சவால் நிறைந்ததாக உள்ளது. சான்றாக, கடையில் சென்று பொன்னி அரிசி என்று வாங்குகிறோம். உண்மையில் அது அசலானதா அல்லது போலியானதா என்று கண்டுபிடிப்பது கடினம். ஏனெனில், ரேஷன் அரிசியை பாலிஷ் செய்து சந்தைபடுத்தி விற்பதும் அறிந்ததே. அதே போன்று ஜீவ அப்பமாகிய இயேசு என்ற நற்செய்தியை இன்று பலவிதமான மக்களின் உணர்ச்சிக்கு ஏற்ப பாலிஷ் செய்து நற்செய்தி என்ற பெயரில் ஊழியம் என்ற போர்வையில் கடை தெருவிற்கு கொண்டு வந்து விற்கின்றனர். அதேபோல இயேசு என்ற நற்செய்தியை பாலிஷ் இல்லாமல் உள்ளபடியே அறிவிக்கின்ற ஊழியர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால் உண்மை எது. போலி எது என்பதை அறிந்து கொள்ளும் உணர்வு மக்களிடம் குறைந்து வருகிறது. உண்மையான நற்செய்தி எது என்பதை உணரும் உணர்வு இன்றைய அவசிய தேவை ஆகும்.

இயேசுவை நற்செய்தியாக அறிவிக்கின்ற பணியில் இயேசுவை கிறிஸ்தவர்களின் கடவுளாக சித்தரித்து பேசுவது அறியாமையின் வெளிபாடு ஆகும். **"இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி"** என்று யோவான் ஸ்நானன் இயேசுவை உலகிற்கு காட்டினான். இந்த தொழுவத்தில் இல்லாத வேறே ஆடுகளும் எனக்கு உண்டு. அவைகள் என் சத்தத்திற்கு செவி கொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனும் ஆகும். எனவே இயேசு என்ற நற்செய்தி கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல அனைத்து சமயத்தார்க்கும் உரியது என்பதை ஏற்க வேண்டும். இத்தகைய சிந்தனை நற்செய்தி பணியின் தேவை ஆகும்.

இயேசு வாழ்ந்த எருசலேம் தொடங்கி உலகமெங்கும் அவரை அறிவிப்பது பெருங்குற்றமாக கருதப்படுகிறது. இந்தியாவிலும் பல வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. ஆதாம், ஏவாள் காலம்தொட்டு இன்றுவரை பொய்மையை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருக்கும் மனுக்குலம் உண்மையை ஏற்க ஏனோ தயங்குகிறது. இப்படி பொய்மையை நோக்கி ஓடும் மனுக்குலத்திற்கு இயேசு என்ற நற்செய்தியை அறிவிப்பது மிகவும் தேவையானதாகும்.

இயேசுவின் போதனைகள் யாவும் பிதாவினாலே வெளிப்படுத்தப்பட்டவைகள் ஆகும். அவற்றின் மைய கருத்து மனிதன் மறுமையில் இறைவனோடு சேர்ந்து வாழ வேண்டும் என்பதாகும். எனவே பரலோக ராஜ்ஜியம் சமீபமாய் இருக்கிறது என்று இயேசு பேசினார். யோவான் ஸ்நானகன் இதே செய்தியை பேசினார். அப்போஸ்தலனாகிய பவுலும் தன்னுடைய கடிதத்தில் உயிர்த்தெழுதலையும் மறுமை வாழ்வையும் தெளிவு படுத்துகிறார். யோவான் சுவிசேஷகரும் புதிய வானம், புதிய பூமி என்னும் கருத்தை வலியுறுத்தி பேசுகிறார். எனவே மக்களை மறுமை வாழ்வுக்கு ஆயத்தபடுதுவதே நற்செய்தி ஆகும். இவற்றை குறித்து இன்றைய காலங்களில் பெரும்பான்மையாக ஊழியர்கள் வாய் திறப்பதில்லை. எனவே இதுவே நற்செய்தி பணியின் தேவை ஆகும்.

### மிஷனரிகள்:

**"நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்"** என்ற இயேசுவின் கட்டளையை ஏற்று சீஷர்கள் உலகமெங்கும் சென்றனர். 18 ஆம் நூற்றாண்டில் மிஷனெரி ஸ்தாபனங்கள் தோன்றிய போது அதில் பணி செய்ய பலர் முன்வந்தனர். அவர்களை மிஷனெரிகள் என அழைக்கிறோம். அவர்களில் பலர் டீக்கனாக, போதகர்களாக,

பேராயர்களாக இருந்தனர். 1903 இல் இந்திய மிஷனெரி சங்கம் ஏற்ப்படுத்தப்பட்ட போது, இந்திய பணத்தால், இந்திய ஊழியர்களால், அது செயல்ப்பட்டது. அந்த சங்கத்தில் இருந்து அனுப்பப்பட்ட ஊழியர்களை மிஷனெரி என்றே அழைக்கிறோம். இன்று இறைப்பணி செய்பவர்களை இறைபணியாளர், குருவானவர், பாஸ்டர், சபை ஊழியர். சுவிசேஷகர், ஐயர், அருள்பணியாளர் என்ற பெயர்களில் அழைக்கிறோம். எவ்வாறு இருப்பினும் கடவுளின் வார்த்தையை பிறருக்கு கொடுக்க செல்லும் எவரும் மிஷனரிகளே. அந்த வகையில் இயேசுவை அறிவிக்க கடமை பெற்ற யாவரும் மிஷனெரிகளே என்பது ஏற்றுக் கொள்ளத்தக்க உண்மை ஆகும்.

**இன்றைய மிஷனெரிகளின் அணுகுமுறைகள்:**

இயேசு கிறிஸ்துவின் மிஷன், விஷன் இரண்டுமே மக்களை உணர்வடைய செய்வதாகும். அவரது காலத்தில் மக்கள் சமய பழக்க வழக்கத்திற்கு, பாரம்பரியத்திற்கு. சடங்கு சம்பிரதாயத்திற்கு, அரசாங்கத்திற்கு, செல்வந்தர்களுக்கு அடிமைகளாக இருந்தனர். தாங்கள் செய்கின்ற செயல்களின் உண்மைத்தன்மை என்ன என்பதை உணராதிருந்தார்கள். எனவே, சமய தலைவர்களான பிரதான ஆசாரியர்கள், வேத பாரகர், போன்றவர்களின் வாக்கிற்கு கீழ்படிந்து வந்தனர். அவர்கள் மக்களை அறியாமையில் வைத்து உணர்சிவயபடுத்தி தாங்கள் சுகமாக வாழ்ந்து வந்தனர். இதனை இயேசு கடுமையாக விமர்சனம் செய்தார். மக்களை உணர்வடைய செய்தார். சான்றாக, ஓய்வுநாளில் எதையும் செய்யகூடாது என்று கூறி வந்தனர். இயேசு நோயாளிக்கு விடுதலை கொடுத்தது விதிமீறல் என்று குற்றம் சுமத்தினர். இயேசு அவர்களை கடிந்து கொண்டு உங்கள் ஆடு மாடு குழியில் விழுந்தால் தூக்கி விடமாட்ீர்களா என்று கேள்வி எழுப்பினார்.

மேற்கண்ட இயேசுவின் காலம் போன்று இன்றும் மக்கள் சமய நிலையில், சமூக நிலையில் அடிமைகளாகவே உள்ளனர். அவர்களுக்கு உண்மை நிலையை எடுத்துகூறி உணர்வடைய செய்வதற்கு பதில் அவர்களை உணர்ச்சிவயபடுத்தி தொடர்ந்து அடிமைதனத்தில் வைக்கவே பெரும்பான்மையான ஊழியர்கள் விரும்புகின்றனர். ஏனெனில், இன்றைய ஆவிக்குரிய சபைகள் என்று தங்களை அழைத்து கொள்ளும் ஆவி இல்லாத சபைகளின் போதகர்கள், பேர் புகழுக்காக மக்களை உணர்ச்சி அடைய செய்யும் வகையில் பாடல்கள் ஆராதனைகள் நடத்துகின்றனர். இதில் மயங்கி கிடக்கின்ற மக்கள் உண்மை நிலை அறியாமல் உணர்வடையாமல் உணர்ச்சிவயப்பட்ட நிலையிலேயே இருகின்றனர். இன்றைக்கு ஆங்காங்கு ஊழியர்கள் பாலியல் குற்றவாளியாக மாறுவதற்கு இந்த உணர்வடையாத நிலையில் உணர்சிவயப்படுத்தலே காரணமாகும். எனவே சபையில் உணர்சிவயப்படுத்தலுக்கு இடம் கொடாமல், உணர்வு நிலைக்கு அழைத்து செல்ல முன்வர வேண்டும். தாவீதும் ஜெபிக்கும் போது, தேவனே என்னை உணர்வடைய செய்யும் என்று வேண்டுகிறார்.

இயேசு தமது போதனையில் செல்வந்தர்களை கடிந்து உரைக்கிறார். செல்வந்தன் பரலோக ராஜ்யம் செல்வது கடினம் என்று கூறினார். ஆனால் இன்றைய மிஷனரிமார்கள் (ஊழியர்கள்) செல்வத்தை தேடுவதற்கு நற்செய்திபணியை தெரிந்து கொண்டுள்ளனர் என்பது வருத்தமான உண்மை ஆகும். தாங்கள் லாபம் சம்பாதிக்க, நீங்கள் ஊழியத்திற்கு கொடுத்தால் கர்த்தர் உங்களுக்கு திருப்பி கொடுப்பார் என்று போதிக்கின்றனர். பண ஆசை எல்லா தீமைக்கும் வேராய் இருக்கிறது என்று வேதம் கூறுகிறது. ஊழியர்களின் போதனைகளோ மாறுபட்டு இருக்கிறது என்பதை மக்கள் ஏனோ உணர மறுக்கின்றனர். இந்த அணுகுமுறையில் ஊழியர்கள் மாற்றம் செய்து நற்செய்தியை உள்ளபடி அறிவிக்க முன்வர வேண்டும். ஆங்காங்கு சில இடங்களில் மிஷனெரிகள் உண்ண உணவின்றி, தங்கள் குடும்பத்தை காப்பாற்ற வழியின்றி துயர சூழலில் நற்செய்தியை அறிவித்து கொண்டிருக்கிறார்கள். என்பதும் மறுப்பதற்கில்லை.

இன்று குறிப்பாக ஊழியர்கள் என்று அழைக்கப்படுகின்ற பலர் புதிய மக்களை சந்தித்து இயேசுவை அறிவிக்க முன்வருவதில்லை. அது அவர்களால் கூடாது. எனவே கூடாரங்களை அமைத்து பாரம்பரியமிக்க சபைகளில் உள்ள விசுவாசிகளை சந்தித்து, ஜெபிப்பதாக கூறி, அவர்கள் மீது அக்கறை உள்ளவர்களாக காண்பித்து அவர்களை சபைகளில் இருந்து பறித்து வருகின்றனர். இதை **'விசுவாசிகள் திருட்டு'** என்று கூறலாம். மக்களும் இங்கும் அங்குமாக சென்று உண்மை சத்தியத்தை அறியாது தங்கள் வாழ்வையும், பொருளையும், அமைதியையும் இழந்து கொண்டிருகின்றனர். இந்த அணுகுமுறையை ஊழியர்கள் கைவிட வேண்டும்.

நவீன உலகில், நற்செய்தியை அறிவிக்க ஊழியர்கள் சிறப்பு பயிற்சி பெறவேண்டும். திருமறையை குறித்த தெளிந்த ஞானம் வேண்டும். அதற்கு அவர்கள் கல்வியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இறையியலில் அடிப்படை தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அறிந்தால் மட்டுமே அறிவிக்க முடியும். இதை கூறினால் இயேசுவின் சீடர்கள் எங்கு சென்று படித்தார்கள்? என்று விதண்டாவாதம் பேசுவோர் உண்டு. அவர்கள் இயேசுவோடு கூட பயணித்தவர்கள். இயேசு கிறிஸ்துவால் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டவர்கள். இதனை உணர்வதில்லை. தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்பது போல் பைபிள் எடுத்தவரெல்லாம் ஊழியக்காரன் என்ற நிலை ஆகிவிட்டது. இன்று வேதாகமத்தை பற்றிய அடிப்படை அறிவு இல்லாமல் பலர் ஊழியம் செய்வது கண்கூடு- அவர்களுக்கு பாட தெரியும், பேச தெரியும், ஆராதனை நடத்துவதாக எதை எதையோ பேசிக் கொண்டிருக்கின்றனர். உண்மை நற்செய்தி பணிக்கு இவர்கள் தடை கற்கள் என்று கூறலாம். இத்தகைய நிலையில் இருப்பவர்கள் தங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ளவேண்டும்.

நற்செய்தி பணி உலகில் தலை சிறந்த பணி. அது இறைவன் கொடுக்கும் பணி. அதனை தங்கள் கையில் எடுத்துக்கொண்டு இறைவன் கூறியதாக சொல்வது உலகின் மகா பெரிய பொய். இதை செய்து கொண்டிருக்கும் ஊழியர்கள் மாறவேண்டும். மக்கள் இவர்களை அடையாளம் காண உணர்வடைய வேண்டும். அது உண்மை நற்செய்தி உலகமெங்கும் பயணிக்க சிறந்த அணுகுமுறையாக அமையும். கள்ள தீர்க்கதரிசிகள், போதகர்கள், ஊழியர்கள் இருந்து கொண்டு தான் இருப்பார்கள். மக்கள் சத்தியம் அறிய உணர்வடைய வேண்டும்.

# நற்செய்தி பணியில் மிஷனரிகளின் அணுகுமுறைகள்

## – ஓர் வரலாற்றுப் பார்வை

**J.ஜான் ஞானராஜ்,**
ஆசிரியர், திருநெல்வேலி

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு இயேசு கிறிஸ்துவின் இறுதி கட்டளையை நிறைவேற்ற அவருடைய சீடர்கள் அனைவரும் நற்செய்தியை அறிவிக்க உலகமெங்கும் புறப்பட்டுச் சென்றார்கள். அன்றைய காலம் முதல் இன்று வரை உலகமெங்கும் நற்செய்தி அறிவிக்கப்பட்டு வருகிறது. அவற்றில் கையாளப்படுகிற அணுகுமுறைகள் கால சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபட்டு வருகிறது.

**மிஷனரிகளின் வருகை**

பதினாறாம் நூற்றாண்டில் தென் தமிழ்நாடு மற்றும் தென் திருவாங்கூர் சார்ந்த கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரையோர கிராமங்களில் நற்செய்தி பணியாற்ற பிரான்சிஸ்கன் சபை மற்றும் இயேசு சபை கத்தோலிக்க கிறிஸ்தவ மிஷனரிகள் ஸ்பெயின், போர்த்துக்கல், பிரான்ஸ் போன்ற நாடுகளில் இருந்து புறப்பட்டு வந்தனர். பதினெட்டாம் நூற்றாண்டு முதல் சீர்திருத்த கிறிஸ்தவ லுத்தரன் மிஷனரிகளும், ஆங்கிலிக்க மிஷனரிகளும், பல சபை இணைந்து தொடங்கிய L.M.S மிஷனரிகளும் அமெரிக்கன் மிஷனின் மிஷனரிகளும், ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் இருந்து புறப்பட்டு வந்தனர்.

**நற்செய்தி பணி**

மிஷனரிகள் நேரடியாகவும், உபதேசிமார்கள் துணையோடும், செமினரி மாணவர்கள் துணையோடும் அனுதினமும் நள்ளிரவு வரை தொடர் நற்செய்தி பணிகள் மாதந்தோறும் ஊழியர் கூட்டம் அதில் உபதேசிமார்கள் தலைமையிடத்திற்கு வரவழைக்கப்பட்டு அவர்கள் செய்த நற்செய்தி பணி குறித்த ஆய்வுகள் மற்றும் ஆலோசனைகள்.

**தேவாலய வழிபாடு**

அனுதினமும் காலையிலும் மாலையிலும் தேவாலயத்தில் வழிபாடு அதில் திருமறைப் பாடம் வாசித்தல், வாசிக்கப்பட்ட திருமறைப் பகுதியிலிருந்து சுருக்கமான அருட்செய்தி. அனுதினமும் காலையிலும் மாலையிலும் தேவாலயத்தில் வழிபாடு நடத்த தூய. சவேரியார் அவர்களும் நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் அவர்களும் ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

**மருத்துவப் பணி**

பழங்காலத்தில் தமிழ்நாட்டை அடிக்கடி தாக்கி வந்த காலரா மற்றும் கொள்ளைக் காய்ச்சல் எனும் விஷக் காய்ச்சலை தடுக்க மருந்து மாத்திரைகளை மிஷனரிகளே விநியோகித்தல்.

**கல்விப் பணி**

உயர் சமூகத்தினர் நடத்தி வந்த அக்காலத் திண்ணை பள்ளிக்கூடங்களில் உயர் சமூகத்தைச் சாராத பிற சமூகத்தினர் கல்வி கற்க தடை செய்திருந்தபடியால் அவர்கள் மத்தியில் கல்வி அறிவைப் புகட்ட மிஷன் வளாகத்தில் புதிய பள்ளிக்கூடங்கள். பள்ளிக்கூட ஆசிரியர் மிஷன் வளாகத்தில் கட்டப்பட்டிருந்த மிஷன் வீட்டில் தங்கி இருந்து அதே வளாகத்தில் உள்ள தேவாலயத்தில் உபதேசியார்/வேதியர் ஆக பணி செய்யும் Teacher Cum Catechist திட்டம் சிறிய கிராமங்களில் வசித்த ஏழை மாணவ மாணவியர் நகர்ப்புறங்களில் அமைந்திருந்த உயர் கல்வி நிலையங்களில் தங்கி கல்வி பயில இலவச விடுதியுடன் கூடிய பள்ளிக்கூடங்கள். அமைக்கப்பட்டன. தரங்கம்பாடிக்கு வந்த முதல் சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனரியான சீகன் பால்கு மாணவ மாணவியர் பள்ளிக்கு வர தயக்கம் காட்டியதால் அவர்களை ஊக்குவிக்க பள்ளிக்கூடங்களில் மதிய உணவு வழங்கும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தியிருந்தார்.

**சமூகப்பணி**

ஊர் பொது கிணறுகளில் தண்ணீர் எடுக்க உயர் சமூகத்தினர் தடை செய்ததால் அனைத்து சமூகத்தினரின் குடிநீர் தேவையை சந்திக்க மிஷன் வளாகத்திலேயே பொது கிணறு அமைத்துக் கொடுத்தது. மேற்கண்ட சிறந்த அடித்தளத்தை கத்தோலிக்க கிறிஸ்தவத்தில் தூய. சவேரியார் அவர்களும் சீர்திருத்த கிறிஸ்தவத்தில் கனம். ரேனியஸ் ஐயரவர்களும் தமது சிறப்பான அணுகுமுறைகள் மூலம் நடைமுறைப்படுத்தினார்கள். அந்த அணுகுமுறைகளை அவர்களுக்குப் பின்பாக வந்த மிஷனரிகளும் சரியாகப் பின்பற்றினபடியினால் நற்செய்திப் பணிக்கான சிறந்த அடித்தளம் தென் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டது.

### கத்தோலிக்க கிறிஸ்தவம்

**தூத்துக்குடி**

1532 இல் தூத்துக்குடியில் கருப்பட்டி பணியாரம் விற்றுக் கொண்டிருந்த மீனவப் பெண்ணை பாலியல் ரீதியாக அவமானமாகப் பேசிய மூர் இஸ்லாமிய போர் வீரனை தட்டி கேட்ட மீனவ பெண்ணின் கணவருக்கும் மூர் இஸ்லாமிய வீரனுக்கும் இடையே நேரடிசண்டை ஏற்பட்டது. அதில் மீனவப் பெண்ணின் கணவரது காது அறுக்கப்பட்டதால் காதிலிருந்த கடுக்கன் கீழே விழுந்தது. அது இஸ்லாமிய வீரனால் எடுத்துச்

செல்லப்பட்டது. இதை சமூக அவமானமாக பரதவர்கள் கருதி தூத்துக்குடியில் பெருங்கலவரத்தில் ஈடுபட்டனர். அதில் ஏழாயிரம் பேர் கொல்லப்பட்டன. அக்கலவரத்தை தூத்துக்குடியில் ஆதிக்கம் செலுத்தி வந்த மூர் இஸ்லாமியர் மிகக் கொடூரமாக அடக்கினர். பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இதை நேரில் கண்ட குதிரை வணிகர் ஜான் டி குரூஸ் மீனவர் மீது பரிதாபம் கொண்டார். பரதவ சமூக தலைவர்களான பட்டங்கட்டியார்களிடம் பேசி கிழக்கு கடற்கரையில் வாழ்ந்த ஒட்டுமொத்த மீனவபரதவரும் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ளவும் போர்த்துக்கீசியப் படை மூலம் கிழக்கு கடலோரத்தில் ஆதிக்கம் செலுத்திய மூர் இஸ்லாமியரை விரட்டியடிக்கவும் போர்த்துகீசிய படை தளபதி மற்றும் கொச்சி விகார் ஜெனரல் தந்தை. மைக்கேல் வாஷ் மூலம் ஏற்பாடுகளைச் செய்தார். அதை உடனடியாக ஏற்றுக் கொண்ட தந்தை.மைக்கேல் வாஷ் தம்மை சந்திக்க வந்த பட்டங்கட்டியார்களுக்கும் திருமுழுக்கு கொடுத்தார். மீனவர்களுக்கு மூர் இஸ்லாமிய ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற்றுக் கொடுக்க கொச்சியில் இருந்து புறப்பட்ட போர்த்துக்கேய படையோடு தந்தை மைக்கேல் வாஷ் அவர்களும் தூத்துக்குடிக்கு வருகை தந்தார். அவரது தொலைநோக்கு அணுகுமுறையால் முப்பதாயிரம் மீனவ பரதவர்கள் கிறிஸ்தவர்கள் ஆனார்கள்.

### கழுகுமலை

கழுகுமலையின் வடகிழக்கு பகுதியில் சுமார் 1000 நாடார்கள் வசித்து வந்தனர். அவர்கள் பிற ஆதிக்க சமூகத்தவரால் ஒடுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்தனர். கழுகுமலையில் தேர் வலம் வரும் நான்கு ரத வீதிகளில் குழுவாக ஊர்வலமாக நாடார்கள் செல்வதற்கு ஆதிக்க சமூகத்தினர் தடை செய்திருந்தனர். கழுகுமலை கழுகாசல மூர்த்தி கோவிலுக்கு சென்று வழிபடவும் அதன் அருகில் உள்ள தெப்பக்குளத்தில் குடிநீர் எடுக்கவும் அவர்களுக்கு உரிமை இல்லை. 1851 முதல் தங்கள் உரிமைக்காக போராட தொடங்கினர். அவர்கள் இருமுறை நீதிமன்றம் சென்றும் அவர்களுக்கு உரிமை கிடைக்கவில்லை வழக்கு தோல்வியில் முடிந்தது. இந்நிலையில் அக்காலத்தில் நற்செய்தி அறிவித்து வந்த கௌசானல் அடிகளாரிடம் கழுகுமலையில் தாங்கள் ஒடுக்கப்படுவதையும் தங்களை கத்தோலிக்க கிறிஸ்தவத்தில் சேர்த்துக் கொள்ளவும் வேண்டிக் கொண்டார்கள். கழுகு மலைக்கு நேரில் வந்து அங்குள்ள சூழ்நிலையை கண்டறிந்த கௌசானல் அடிகளார் அங்குள்ள நாடார் தெருவில் 300 பேருக்கு திருமுழுக்கு கொடுத்து அவர்கள் அனைவரும் ஆராதிப்பதற்கு கழுகுமலை கோவில் தேர் வரும் கீழ ரத வீதியில் ஓர் இடத்தை வாங்கி அந்த இடத்தில் சிறிய தேவாலயத்தையும் கட்டிக் கொடுத்தார். புதிய கிறிஸ்தவர்கள் தேர் வலம் வரும் வீதியில் குழுவாக செல்லும் சூழ்நிலையை உருவாக்கினார். இது ஆதிக்க சமூகத்தவரின் கண்களை உறுத்தியது. குருத்தோலை ஞாயிறு மற்றும் ஈஸ்டர் பண்டிகைக்காக சிறிய பந்தல் ஒன்றை அந்த தேவாலயத்தின் முன்பு அமைத்திருந்தனர். அந்த காலம் பங்குனி உத்திர தேர் திருவிழா நடைபெறும் காலமாக இருந்தது தேர் வலம் வர சிறிதளவு கூட இடையூறு இல்லாமல் அந்த பந்தல் சிறியதாக அமைக்கப்பட்டிருந்தது. ஆனாலும் தேரை இழுத்து வந்த ஆதிக்க சமூகத்தினர் வேண்டுமென்றே அந்த தேரை அந்த சிறிய பந்தல் மீது மோதும் வகையில் கொண்டு வந்து கலவரத்தை தொடங்கினர். கலவரக்காரர்களோடு எட்டயபுரம் ஜமீன் மேலாளர் வேங்கடராயர், அவரோடு வந்த பஞ்சநாத ஐயர், கிராமமுன்சிப் ஆழ்வார்சாமி நாயக்கர் ஆகியோர் வருகை தந்தனர். ஞாயிறு வழிபாட்டிற்காக வந்திருந்த கிறிஸ்தவ நாடார்களும் கலவரக்காரர்களைத் திருப்பித் தாக்கினர்.

வேங்கடராயர் வயிற்றில் கத்திக்குத்து விழுந்தது குடல் சரிந்து அவர் அந்த இடத்திலேயே மரணமடைந்தார். பஞ்சநாத ஐயரின் வலது கை வெட்டப்பட்டது. கிராம முன்சிப் ஆழ்வார்சாமி நாயக்கரின் உடலில் கத்திக்குத்து ஆழமாக பாய்ந்தது அவரை உடனே கம்மவார் சத்திரத்திற்கு அழைத்துச் சென்றனர் மருத்துவம் பார்த்தனர். அவர் மறுநாள் மரணம் அடைந்தார்.

கலவரத்தில் தேர் திருவிழாவிற்க கொண்டிருந்த பல சமூகத்தவரும் தேவாலயத்திற்குள் வழிபாட்டிற்காக இருந்த கிறிஸ்தவர்களை சூழ்ந்து கொண்டனர். கிறிஸ்தவர்கள் தேவாலய கதவை பூட்டிக்கொண்டு இருக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. தேவாலயத்திற்கு கலவரக்காரர்களால் தீ வைக்கப்பட்டது முன் பந்தலுக்கும் தீ வைக்கப்பட்டது. நெருப்பின் காரணமாக தேவாலயத்தில் இருந்து வெளியேறிய கிறிஸ்தவர்களை அனைத்து சமூகத்தவரும் இணைந்து தாக்க சூசை முத்து என்ற பத்து வயது சிறுவன் தலையில் எண்ணெய் ஊற்றி தீ வைத்து கொளுத்தப்பட்டான். உடல் கருகி மரணம் அடைந்தான். வேதமாணிக்கம் ராயம்மாள் அவர்களது பிள்ளைகள் ஞானமுத்து அனந்தம்மாள் ஆகிய நால்வரும் தீப்புகையில் மூச்சு திணறி இறந்தனர். ஒரு தாயின் கையில் இருந்த கை குழந்தை பறிக்கப்பட்டு தீயில் வீசி எறியப்பட்டு கொலை செய்யப்பட்டது. கிறிஸ்தவர் அல்லாத நாடார்களும் தாக்க பட்டனர். அனைவரது வீடுகளும் கொள்ளையடிக்கப்பட்டு, பெண்களின் காது கழுத்தில் இருந்த நகைகள் பறிக்கப்பட்டது மற்றும் பெருங்கூட்டமாக இருந்த கலவரக்காரர்கள் 36 கிறிஸ்தவர்களை சிறை கலவரம் பகைவரால் திட்டமிட்டு தொடங்கப்பட்டதால் அங்கு வந்திருந்த காவல்துறை இந்த சம்பவங்களை வேடிக்கை பார்த்தது.

ஆதிக்க சமூகத்தினர் நாடார்களின் வீடுகளை உடைமைகளை சூறையாடியதோடு மட்டுமல்லாமல் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் மீது கொலை வழக்குகளையும் தொடர்ந்தனர். பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களை பாதுகாக்கக் கோரி கௌசானல் அடிகளாருக்கு தந்தி அடிக்கப்பட்டது. தந்தியைப் பார்த்ததும் கௌசானல் அடிகளார் கழுகுமலை வந்து நேரில் களம் இறங்கினார். சிறையில் அடைக்கப்பட்டிருந்த 36 கிறிஸ்தவர்களுக்காக சிறந்த வக்கீல்கள் மூவரை (தாம்சன் எனும் ஐரோப்பியர் மற்றும் ஆரோக்கியசாமி குப்புசாமி ஐயர்) செசன்ஸ் கோர்ட்டுக்கு ஒழுங்கு செய்தார். சிறப்பாக வாதிட்ட போதும் செசன்ஸ் கோர்ட்டில் நீதி கிடைக்கவில்லை இரு கிறிஸ்தவர்களுக்கு தூக்கு தண்டனையும், 23 பேருக்கு ஆறு மாத கடுங்காவல் தண்டனையும் 11 பேருக்கு நான்கு மாத சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது. ஆனாலும் மனம் தளராத கௌசானல் அடிகளார் கழுகுமலை சம்பவத்தை குறித்தும் கிறிஸ்தவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்தும் அனைத்து முன்னணி

நாளிதழ்களிலும் கட்டுரைகள் எழுதினார். இயேசு சபை தலைமை அதிபர் மூலமாக இங்கிலாந்து கார்டினலுக்கு கழுகுமலை சம்பவம் குறித்து தகவல் அனுப்பி இங்கிலாந்து கார்டினல் மூலம் இங்கிலாந்தில் இருந்த இந்தியாவுக்கான செயலாளரின் நேரடி கவனத்திற்கு கொண்டு வந்து அவர் மூலம் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு நீதி கிடைப்பதற்கான அழுத்தம் கொடுக்க ஏற்பாடுகள் செய்தார். கழுகுமலை கிறிஸ்தவர்கள் சார்பாக பிரபல வழக்கறிஞர் திரு. வெட்டர்பனை உயர் நீதிமன்றத்தில் வாதிடச் செய்தார். சாதிக் கொடுமை அதன் பின்புலம் உயர்நீதிமன்றத்தில் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டது. நீதிபதிகள் ஷெப்பர்ட், டேவிஸ் ஆகியோர் அடங்கிய டிவிஷன் பெஞ்ச் வழக்கை விசாரித்தது. 03.12.1895 இல் தீர்ப்பு வெளிவந்தது. 36 கிறிஸ்தவர்களும் விடுதலை அடைந்தனர். கௌசானல் அடிகளாரின் இந்த பேருதவியை நேரில் கண்ட அந்த தெரு மக்கள் அனைவரும் சுமார் ஆயிரம் பேர் ஒட்டுமொத்தமாக கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

**சீர்திருத்த கிறிஸ்தவம்**

ஊர் பிரச்சனைகளை நற்செய்தி நோக்கில் கொண்டு சென்ற போதகர்களின் அணுகுமுறைகள்:

**பிரமதேசம்.**

அம்பாசமுத்திரத்திற்கு முன்பாக 1861 வரை தாலுகா தலைமையிடமாக பிரமதேசம் இருந்தது. சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு பெரியதாழை அருகில் உள்ள மணல்குண்டுவில் புறப்புடையார் சாஸ்தாவை வழிபட்டு வந்த மச்சான் மாப்பிள்ளை உறவுமுறை கொண்ட இரு பெரும் குடும்பத்தினர். பிரமதேசத்தில் குடியேறி தற்போதுள்ள நாடார் மேல தெருவை உருவாக்கினர்.

**1880 களில் பிரமதேசம்**

நாடார் மேல தெரு ஊர் கூட்டத்தில் அந்த இருபெரும் குடும்பங்களான 60 வீட்டு சொக்காரர் குடும்பம் மற்றும் பத்ரகாளியம்மனை சிறப்பு குலதெய்வமாக வழிபட்ட குடும்பம் இடையே வாய் தகராறு ஏற்பட்டது. அதில் 60 வீட்டு சொக்காரர் (பங்காளிகள்) குடும்பங்களுக்கு தலைமை தாங்கிய நாராயண நாடாரை எதிர்தரப்பு குடும்பத்தினர் அவமானமாகப் பேசினர். அம்பாசமுத்திரம் சேகர குருவானவர் தலைமையில் பிரமதேசத்தில் நற்செய்தி பணி நடைபெற்று வந்தது. யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை,

ஊர் கூட்டத்தில் தன்னை எதிர் தரப்பு குடும்பத்தினர் அவமானப்படுத்தியதை பொறுத்துக் கொள்ள இயலாமல் மன வேதனையில் இருந்த நாராயண நாடார் நான் கிறிஸ்தவ வேதத்தில் சேர்ந்து இவ்வூருக்கு வேதத்தைக் கொண்டு வருவேன் வேதக்கோயில் கட்டுவேன் என சபதமெடுத்தார். மன வேதனையான நேரத்தில் பிரம தேசத்தில் சொல்லப்பட்ட கிறிஸ்தவ நற்செய்தி அவருக்கு ஆறுதலாக இருந்தது.

அக்காலத்தில் 1878 முதல் அம்பாசமுத்திரம் மற்றும் அதன் சுற்றுவட்டார சபைகள் சேர்க்கப்பட்டு அம்பாசமுத்திரம் சேகரம் உருவாக்கப்பட்டிருந்தது. பிரமதேசம் நாடார் தெருவில் உள்ளவர்களும் கல்லிடைக்குறிச்சி மேல் முகம் நாடார் தெருவில் உள்ளவர்களும் உறவினர்களாக இருந்தனர். கல்லிடைக்குறிச்சி மேல் முக நாடார் தெருவினர் நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்களின் மகன் சார்லஸ் ரேனியஸ் மூலம் 1850 இல் கிறிஸ்தவத்தை ஏற்றிருந்தனர். அதன் மூலம் அங்கு சபை புதுப்பிக்கப்பட்டிருந்தது. அம்பாசமுத்திரம் சேகரத்தின் முக்கிய சபையாக கல்லிடைக்குறிச்சி இருந்தது. நாராயணன் அம்பாசமுத்திரம் சென்று சேகர குருவானவர் அவர்களை சந்தித்து தாமும் தமது குடும்பத்தினரும் கிறிஸ்தவராக விருப்பம் தெரிவித்தார். அவரும் அதை ஏற்று நாராயண நாடாருக்கு நல்லதம்பி என்ற பெயரிலும் வாலிபரான அவரது மூத்த மகனுக்கு பரமானந்தம் என்ற பெயரிலும் திருமுழுக்கு கொடுத்தார். பரமானந்தத்திற்கும் கல்லிடைக்குறிச்சியைச் சார்ந்த நற்குணத்தானின் மகள் அன்னவடிவுக்கும் கல்லிடைக்குறிச்சி தேவாலயத்தில் 12.11.1884 இல் திருமணம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து சில ஆண்டுகளில் நாராயண நாடாரின் ஒன்றுவிட்ட தம்பி அருணாச்சலத்தின் மகள் சந்திரவடிவுக்கும் நற்குணத்தானின் மகன் இயேசுவடியானுக்கும் 05.08.1892 இல் திருமணம் நடைபெற்றது.

நாராயணன் நல்லதம்பி தமது 60 வீட்டு சொக்காரர் குடும்பத்தாரிடம் அவர்களும் கிறிஸ்தவராகும்படி வேண்டுகோள் விடுத்தார். அவர்களும் இப்பிரச்சனையைத் தங்கள் குடும்பத்திற்கு ஏற்பட்ட அவமானமாகக் கருதியதால் குடும்பத் தலைவரின் வேண்டுகோளை ஏற்றனர். உடனடியாக அந்த குடும்பத்தின் பெரியவர்களான பழனி பாக்கியநாதன் என்ற பெயரிலும் கருத்தக்கண் ஞானக்கண் என்ற பெயரிலும் மூக்க நாடார் என்ற நெல்லையப்பன் சாமுவேல் வேதநாயகம் என்ற பெயரிலும் அம்பாசமுத்திரம் குருவானவரிடம் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர். பிற்காலத்தில் நாராயணன் நல்ல தம்பியின் சித்தப்பாவுடைய பேரப்பிள்ளைகளான காளியப்பன், கதிரேசன் ஆகியோர் காலேப், ஐசக் கருணாகரன் என்ற பெயர்களில் திருமுழுக்கு பெற்றனர். இக்குடும்பத்தின் பெரும்பான்மையோர் இன்றளவும் கிறிஸ்தவர்களாக உள்ளனர். நாராயணன் நல்லதம்பியின் மகளுக்கும் பிரமதேசம் நாடார் கீழத் தெரு ஆத்தியடி வளைவு பாபநாசத்திற்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது, திருமணத்திற்கு முன் அவரையும் திருமுழுக்கு பெற கேட்டுக் கொண்ட போது அவர் ஏசுதாசன் என்ற பெயரில் திருமுழுக்கு பெற்று சபையில் சேர்ந்தார். ஆத்தியடி வளைவில் உள்ள குடும்பத்தினர் அடைக்கலம் சாஸ்தாவை குலதெய்வமாக வழிபட்டு வந்தவர்கள் அவரைத் தொடர்ந்து ஆத்தியடி வளைவில் பாபநாசம் என்ற ஏசுதாசனின் குடும்ப உறவினர்களான கிருஷ்ணன் ஞானப்பிரகாசம் என்ற பெயரிலும், ஆறுமுக நயினார் ஆரோக்கியம் என்ற பெயரிலும் அதே குடும்பத்தில் சுடலைமுத்து நாடாரின் பிள்ளைகள் செல்வராஜ், ராஜநாயகம் ஆகியோரும் திருமண உறவின் காரணமாக கிறிஸ்தவராயினர், பிரமதேசம் நாடார் மேலத் தெருவில் பத்ரகாளியம்மனை சிறப்பு குலதெய்வமாக வழிபட்ட குடும்பத்தில் ராஜாமணி, திரவியம் ஆகியோர் கிறிஸ்தவராயினர். ஊர் பிரச்சனைகளும் திருமண உறவுகளும் பிரமதேசத்தில் கிறிஸ்தவத்தை நிலை நிறுத்துவதில் உதவிகரமாக இருந்தது.

**திருமண உறவுகள் மூலம் நற்செய்தி சென்ற கிராமங்கள்:**

### ஆதிச்சப்பேரி

1858 க்கு முன் வைராக்கிய இந்துக்கள் நிறைந்த ஒரு கிராமமாக ஆதிச்சப்பேரி இருந்தது அதன் அருகில் உள்ள கரிசல்பட்டி இடையங்குளம் ஓடைக்கரை போன்ற கிராமங்கள் முழு கிறிஸ்தவ கிராமங்களாக மாறியிருந்த சூழ்நிலையில் ஆதிச்சப்பேரி கிராம வாலிபர் ஒருவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார். அவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதற்கு ஊரில் பெரும் எதிர்ப்புகள் கிளம்பிய நிலையில் விசுவாசத்தில் உறுதியாய் நின்றார். தனக்கு மனைவியாக கிறிஸ்தவ பெண் தான் வரவேண்டும் என்பதில் உறுதியாக இருந்த அவர் தனக்கு தன் பெற்றோர் பார்த்த இந்து பெண்களை எல்லாம் திருமணம் செய்ய மறுத்துவிட்டார். தங்களுடைய மகன் திருமணம் ஆகாமலே இருந்து விடுவானோ என்று எண்ணிய அவனது பெற்றோர் அவன் கிறிஸ்தவ பெண்ணை திருமணம் செய்வதற்கு சம்மதித்தனர். அந்த வாலிபனுடைய நண்பர் ஒருவர் இடையன் குளத்தில் அன்பும் அடக்கமும் அழகும் உள்ள நற்குணசாலியான கிறிஸ்தவ பெண் ஒருவர் இருப்பதைக் குறித்து அந்த வாலிபனிடம் கூறினார் அந்த வாலிபன் தனது பெற்றோரிடம் அதைக் கூறி இடையன்குளத்து கிறிஸ்தவ பெண்ணை பெண் கேட்டு திருமணத்தை உறுதி செய்தனர். 1858 ஆம் ஆண்டு இடையன்குளத்தில் வைத்து இருவருக்கும் திருமணம் நடைபெற்றது அந்த திருமணத்தை மிஷனரி ஆஷ்டன் டிப் ஐயரவர்கள் நடத்திக் கொடுத்தார்கள். அந்த திருமண ஆராதனையில் ஆஷ்டன் டிப் அருளுரை ஆற்றும்போது இருவருக்கும் கீழ்க்கண்ட ஆலோசனைகளை வழங்கினார்.

1. ஆதிச்சப்பேரியில் நீங்கள் எதிர்ப்புகளை எதிர்கொள்ள வேண்டியதிருக்கும் அவற்றில் பொறுமையாக இருக்க வேண்டும்.
2. விசுவாசத்தில் உறுதிபட நிலைத்திருக்க வேண்டும்.
3. எரிந்து பிரகாசிக்கிற ஒளியாய் இருக்க வேண்டும்.
4. அன்பு, நற்குணம் மிகுந்த கிறிஸ்தவ வாழ்வு மூலம் ஆதிச்சப்பேரி கிராமத்தாரை அந்த பெண் கிறிஸ்துவண்டை கொண்டு வர வேண்டும் என்பதை வலியுறுத்தி அருட்செய்தியை நிறைவு செய்தார்.

ஆதிச்சப்பேரியில் குடும்ப வாழ்க்கையை தொடங்கிய அந்த குடும்பத்தாருக்கு தொடக்கத்தில் சூழ்ந்திருந்த பகை வெறுப்பு, எல்லாம் வருத்தத்தை கொடுத்தது ஆனால் நற்சாட்சி மிக்க தன் வாழ்க்கையினால் கிறிஸ்தவ அன்பை அப்பெண் பிறருக்கு வெளிப்படுத்தினாள். முதலில் கணவரது குடும்பத்தினரரும் பின் ஊராரும் ஏற்றுக்கொண்டனர். நான்கு ஆண்டுகளுக்குள் 1862 இல் அந்த கிராமத்தாரனைவரும் கிறிஸ்தவர்களானார்கள். அந்த பெண் சிறந்த சுவிசேஷகியாக நடந்து கொண்டாள்.

### புலவன்குடியிருப்பு

1890 களில் புலவன்குடியிருப்பு வைராக்கியம் மிக்க இந்து கிராமமாக இருந்தது. புலவன் குடியிருப்பின் பூர்வ குடும்பத்தைச் சார்ந்தவர்கள் நாகர்கோவில் வட்டாரத்தில் இருந்து அங்கு குடியேறியவர்கள். அந்த குடும்பத்தில் மாயசக்தி என்பவரது ஒரே மகள் பொன்னம்மாளுக்கும் இடையன்குளத்தைச் சார்ந்த கிறிஸ்தவ வாலிபர் செல்வசிகாமணிக்கும் திருமணம் நடைபெற்றது. பொன்னம்மாள் ஒரே பெண்ணாக இருந்தபடியினால் செல்வசிகாமணி தனது மனைவியின் வீட்டோடு புலவன் குடியிருப்பில் குடும்பமாய் வாழும் சூழ்நிலை ஏற்பட்டது. செல்வசிகாமணி ஆளுமை மிக்க ஒரு தலைவர் உதாரகுணமும் தைரியமும் கொண்டவர். இவர் திருமணம் ஆகி புலவன் குடியிருப்பு சென்ற காலத்தில் புலவன் குடியிருப்பு மற்றும் பூதத்தான் குடியிருப்பு ஆகிய இரு கிராமங்களும் பத்தமடையைச் சேர்ந்த சகோதரர்களான இரு பண்ணையார்களின் நேரடி ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. இவர் அந்த இரு பண்ணையார்களிடமும் பேசி அவர்களது வசம் இருந்த இந்த இரு கிராமத்துக்கான 21 பங்கு நிலத்தை புலவன் குடியிருப்புக்கு 10 1/2 பத்தரை பங்கு, பூதத்தான் குடியிருப்புக்கு 10 1/2 பத்தரை பங்கு என பிரித்துக் கொடுத்து இரு கிராம மக்களும் சுயாதீனமாக வாழும் உரிமையை பெற்றுக் கொடுத்தார். இப்பணி 1908 இல் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது.

இவரது ஆளுமை திறன் அன்பு கூறும் திறன் காரணமாக புலவன் குடியிருப்பு கிராமத்தில் பாதி பேர் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள். திருமண உறவுகளை கிறிஸ்தவ நற்செய்தி கிராமங்களுக்குள் செல்வதற்கான அணுகுமுறையாக மிஷனரிகள் பயன்படுத்தினர்.

### புதிய விசுவாசிக்கு குடும்ப வாழ்வை அமைத்துக் கொடுத்த அணுகுமுறை

நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸின் நற்செய்திப் பணியால் 1828 இல் வயதான பொன்னாசாரி கிறிஸ்தவத்தை ஏற்றதால் கல்லிடைக்குறிச்சியில் திருச்சபை உருவானது. சில ஆண்டுகளில் 14 குடும்பங்களைக் கொண்டதாக சபை உயர்ந்தது.

ரேனியஸ் ஐயரவர்களின் பணி நீக்கம், கல்லிடைக்குறிச்சி பிராமண துணி வணிகர்களின் பெரும் நெருக்கடி மற்றும் பொன்னாசாரி மனைவியின் பின் மாற்றம் காரணமாக சபை முற்றிலும் நலிந்தது.

ரேனியஸின் மகன் சார்ல்ஸ் ரேனியஸ் (டோனாவூர் தலைமை மிஷனரி) டோனாவூர் வட்டார உபதேசிமார்களோடு இணைந்து 1849,1850 இல் நற்செய்தி பணி செய்ததின் காரணமாக கல்லிடைக்குறிச்சி மேல் முகம் நாடார் தெருவில் இசக்கிமுத்து நாடார் - வடிவு தம்பதியரின் மகன் அய்யம்பெருமாள் எனும் வாலிபர் முதன்முதலாக அந்த தெருவில் கிறிஸ்தவத்தை ஏற்று சுவிசேஷமுத்து என்ற அடையாளப் பெயரில் திருமுழுக்கு பெற்றார். மேல் முகம் நாடார் தெரு மக்கள் அவரை பகைத்த. நிலையில் டோனாவூர் குருமார், உபதேசிமார்களின் முயற்சி காரணமாக ரேனியஸ் கால கிறிஸ்தவ கிராமமான நல்லமரத்தைச் சார்ந்த காலேப் நாடாரின் மகள் சூசன்னாளுக்கும் (1832 - 1910) கல்லிடைக்குறிச்சி சுவிசேஷமுத்துவுக்கும் திருமணம் நடைபெற்றது. அக்கால மிஷனரிகள் புதிய விசுவாசிக்கு குடும்ப வாழ்வை அமைத்துக் கொடுத்தனர்.

நற்செய்தி அறிவிப்புப் பணியில் அன்றைய மிஷனரிகள் கையாண்ட முன் உதாரணமான சரியான அணுகுமுறைகளை வரலாற்று ஒப்பீட்டு பார்வையில் கண்டோம். அன்றைய மிஷனரிகளின் முன் உதாரணமான சரியான அணுகுமுறைகளை நற்செய்தி பணியில் பயன்படுத்தி ஆத்தும ஆதாயம் செய்வோம்.

தமிழ் நாட்டின் தனிப்பெரும் நாவலாசிரியர்

அ.மாதவையா அவர்களின்

# கிளாரிந்தா

தமிழ்நாட்டில் வெளி வந்த முதல் வரலாற்று நாவல்

## தொடர்– 26



அவர்கள் பங்களாவை வந்து சேரும்போது இரவு மணி பதினொன்று. பலவீனத்தையும் பொருட்படுத்தாமல் கிளாரிந்தா வண்டியிலிருந்து இறங்கியதும் வேகமாக நடந்து வீட்டினுள் சென்றாள். சிறிய ஓசை கேட்டாலும் தரை அதிர்ந்தாலும்கூட அவருக்கு மிகுந்த வேதனை உண்டாக்கி விடுகிறது என்று ராமப்பா ஏற்கனவே எச்சரிக்கை செய்திருந்ததால், அவர் படுத்திருந்த அறைக்குள் ஓசைபடாமல் அடியெடுத்துவைத்து நுழைந்தாள். அவர் தூங்கிக் கொண்டிருந்தார்.

கடவுளே இது என்ன? நான்கே நாட்களுக்குமுன், பாதிரியாரின் வீட்டெதிரில் அவள் கைகளை மென்மையுடனும் பரிவுடனும் பிடித்து வண்டியிலிருந்து இறக்கிவிட்ட அந்தத் திடகாத்திரமான ஆங்கிலேயரா இவர்? குழிவிழுந்த கண்களுடன் வெளுத்து இளைத்துப் படுத்திருந்தார். சவரம் செய்யாமல் முடி நெருக்கமாக வளர்ந்திருந்தது. பத்து வருடங்கள் மூப்பாகிவிட்டவர்போல் தோன்றினார். நெற்றியிலும் கண்களைச் சுற்றிலும்கூட சுருக்கங்களும் கோடுகளும் புதிதாக விழுந்திருப்பனபோலிருந்தது. உரமேறியிருந்த கைகள் கூடுகளைப்போல் தோற்றமளித்து கட்டிலில் சோர்ந்து கிடந்தன. மனச்சாட்சி குத்திய வேதனையும் அவளைப் பிரிந்த ஏக்கமும் இப்படி ஒரு பயங்கர மாற்றத்தை உண்டுபண்ணியிருந்தன.

கிளாரிந்தா லிட்டில்டன் நெற்றியில் மெதுவாக முத்த மிட்டாள். ஆனால் அவர் அயர்ந்து தூங்கிக்கொண்டே இருந்தார். கண் விழிக்கவில்லை. அவளும் அவர் தூக்கத்தைக் கலைக்க விரும்பாமல் வைத்தியரை உடனே வரவழைக்க வேண்டும் என்று தீர்மானித்தவளாய் அறையை விட்டு மெல்ல வெளியே புறப்பட்டபோது, கிளாரிந்தாவுக்கு என்று விலாசமிட்ட ஒரு கடிதம் அவர் மேசையில் இருப்பதைக் கவனித்தாள். அதை எடுத்துக்கொண்டு தன் அறைக்குச் சென்றாள். அங்கே யாவும் அவள் விட்டுவைத்த நிலையிலேயே இருந்தன. கண்ணீர் கண்களை மறைத்ததால் கடிதத்தை அவளால் சரியாய்ப் படிக்க முடியவில்லை.

**என்னுடையவளே, என் அன்பிற்குரியவளே,**

அப்படியானால் உன் கற்பையும் மானத்தையும் அபகரித்த இந்த ஈனனை விட்டு விட்டு நீ போய்விட்டாய். உன்னுடைய மன்னிப்பைக் கேட்பதையோ பெறுவதையோபற்றி நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. என்னைப் பழிப்பதுபோல் நீ பார்த்த பார்வையை என் உயிர் உள்ள அளவும் மறக்க முடியாது. அந்தப் பார்வையை நினைக்கையில் உன் முகத்தைப் பார்க்கவும் கூசுகிறேன். உன் அழகிய முகத்தைப் பாராமல், உன் இனிய குரலைக் கேளாமல், உத்தமியான என் காவல் தெய்வமே! நீ என் அருகில் இல்லாமல் இந்த உயிரை நான் தாங்க இயலாதவனாக இருக்கிறேன். நான் செய்துவிட்ட இந்த வெட்கங்கெட்ட ஈனச் செயலுக்கு சாவு ஒரு சிறிய தண்டனையேயாகும். ஆனால் என் கண்ணே, நீ இதை நம்ப வேண்டும். உன் மீது கொண்ட அன்பும் ஆசையும், என் ஆத்மா எங்கும் வியாபித்து என்னை மீண்டும் மனிதனாக் கிற்று. உன்னை இழந்து விடுவேனோ என்ற பயமே என்னை அப்படிச் செய்யத் தூண்டிற்று. என் ஆத்மா பல ஆண்டுகளாக நோயுற்றுச் செத்திருந்தது. உன் அன்பின் வலிமை தான் அதை மீட்டு, மீண்டும் வாழுமாறு உயிர் அளித்தது. அந்தப் புத்துயிரை திரும்பவும் இழந்து இறந்து போவதென்றால் என்னால் தாங்க இயலவில்லை. ஆகவேதான் உன்னை ஏமாற்றினாலும்கூட, உன்னைவிட்டுப் பிரியாதிருக்க விரும்பினேன். வில்லங்கம் நீங்கிய கணமே முறையாக உன்னைத் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்றே எண்ணியிருந்தேன். எந்த மணி நேரமும் அந்தச் செய்தி வரலாம் என்று காத்திருந்தேன். என்னுடைய உயில் இதை நிரூபிக்கும்.

எல்லா ஜீவராசிகளுக்கும் உயிர் இனிமையானது. என் இன்பத்துக்காக இன்னொருத்தியினுடைய மரணத்தை விரும்பியது சுயநலமும் குரூரமும் மிகுந்த செயலாகும். ஆனால் வெட்கத்தை விட்டுச் சொல்லுகிறேன். அவளுக்காக நான் சகித்துவிட்ட துன்பங்களுக்கெல்லாம் பரிகாரமாக, அந்தக் கசப்பான பிடியிலிருந்து விடுதலைபெற நான் தகுதியுடையவனே என்ற எண்ணத்தில் அந்த விருப்பத்தை நான் மனதில் வளர்த்தே வந்தேன். அது அவளுக்குமே விடுதலை யாகத்தானிருக்கும். ஆனால் கடவுளின் சித்தம் வேறு விதமாக இருந்தது. என்னுடைய அவசரப் புத்தியினாலும் சுயநலத்தினாலும் நான் அப்படி நடந்துகொண்டுவிட்டேன். அதன் பலனை இப்பொழுது அனுபவிக்கிறேன்.

நீ என்னை விட்டுவிட்டுப் போய்விட்டாய். நீ இல்லாமல் வாழ்க்கை தாங்கமுடியாததாக இருக்கின்றது. மரணம் எனக்கு

தண்டனை அல்ல, பெருந்துன்பத்தினின்று பெறும் விடுதலை. நீ இல்லாமல் உயிர் வாழவே இயலாதாகையால் நான் தற்கொலை செய்துகொள்வதென்று முடிவு செய்துவிட்டேன். தனிமை என்ற நினைவே என்னை வெறியடையச் செய்கிறது. எனது கையாலாகாத்தனத்தால், வண்டியைக் காலியாகக் கொண்டுவந்த சாரதியைச் சாட்டையால் அடித்து விட்டேன். நான் தனியாக வாழ்ந்தால் எனக்கு வெகு விரைவில் பைத்தியம் பிடித்துவிடும் என்பது உறுதி. அப்பொழுது இந்தப் பாழும் வாழ்க்கையை நானே முடித்துக்கொள்ளும் சக்தியையும் இழந்துவிடுவேன். அதனால்தான் நான் இப்பொழுதே தற்கொலை செய்துகொள்கிறேன்.

நான் போய்விட்ட பிறகு என்னைப்பற்றிக் கருணையுடன் நினைத்துக்கொள். என் நேசத்தை, நமது நேசத்தை, நான் வாழ்க்கையில்பட்ட துன்பங்களை, கடவுள் என் கைகளில்

வைத்த விலைமதிப்பற்ற பிரசாதத்தை, நான் அனுபவிக்க எண்ணிய ஆர்வத்தை நினைத்துக்கொள். உன்னுடைய அன்பையும், நீ சகித்த இன்னல்களையும், சட்டம், ஒழுக்க விதிகளின் பேரால் உனக்கு இழைக்கப்பட்ட கொடிய அநீதிகளையும், மனிதன் சகமனிதனுக்குக் கருணைகாட்டத் தவறுவதால் எண்ணற்ற மனிதர்கள் துன்புற நேர்வதையும் நினைத்துக்கொள். இவை எல்லாவற்றையும், நாம் ஒன்றாக வாழ்ந்த வாழ்வையும், மிகக் குறுகிய காலத்துக்குள் குரூரமாக முளையிலேயே கிள்ளி எறியப்பட்டுவிட்ட அந்த வாழ்வையும் நினைத்துக்கொள்வதால் ஒருவேளை நீ என்னை மன்னிக்க முடியும் என்று ஆசையுடன் நம்புகிறேன்.

இனி நான் என்ன சொல்ல இருக்கிறது? தகுதியற்ற தந்தையின் பாவமும் பழியும் அந்தப் பச்சிளங் குழந்தையை- இந்தக் கண்கள் இனி பார்க்க இயலாத அந்தச் சிசுவைத் தொடராதிருப்பதாக.

ஆனால் ஒன்று. நித்தியத்தின் தீரத்தில் நின்றுகொண்டிருப்பதால் முன்னைவிடத் தெளிவாகவே என் ஆத்மா அதைத் தரிசிக்கின்றது. நம்முடையதைப்போன்ற அன்பு தவறானதாகவோ பாபகரமானதாகவோ இருக்க முடியாது; கருணை என்னும் தெய்வீக சிம்மாசனத்துக்கு எதிரில் நான் உரிமை கொண்டாடுவேன் உன்னை என்னுடையவளாக என்பது உறுதி.

என் அன்பே, நான் விடைபெறுகிறேன். இதைவிடச் சிறந்த ஓர் உலகத்தில் நாம் மீண்டும் சந்திக்கும் வரை கடவுள் உன்னைப் பாதுகாப்பாராக. அவருடைய எல்லையற்ற கருணையினால் என்னையும் மன்னிப்பாராக.

**ஆமென்,**

**மரணம் வரை உன்னுடையவனான**

**ஹாரி**

கிளாரிந்தா கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படித்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள். அவள் இருதயத்தில் அமைதி குடிகொண்டது; கடவுள்பால் நன்றியுணர்ச்சி பொங்கியது. அவ்விடத்திலேயே முழங்காலிட்டு உள்ளத்தின் உணர்ச்சிகளைக் கொட்டி அமைதியாக கடவுளுக்கு நன்றிப் பிரார்த்தனை ஏறெடுத்தாள்.

அப்போது அடுத்த அறையில் ஏதோ சப்தம் கேட்டது. அங்கே விரைந்தாள். லிட்டில்டன், 'எஜமானி அம்மா வந்து விட்டார்களா, ராமப்பா' என்று கேட்டுக்கொண்டிருந்தது காதில் விழுந்தது. ஆனால் ராமப்பா அறையில் இல்லை. கிளாரிந்தா விரைந்து சென்று, 'என் அன்பே! நான் இங்கே- தான் இருக்கிறேன். இதோ திரும்பி வந்துவிட்டேன். இனி யார் சொன்னாலும் சரி, அவர் குருவானாலும் சரி, பரிசுத்தவானானாலும் சரி, உங்களை விட்டுவிட்டுப் போகவேமாட்டேன்' என்று தழுதழுக்கக் கூறினாள்.

அவளையே சிறிதுநேரம் அமைதியாகவும் நிச்சயமில்லாமலும் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, தளர்ந்த குரலில் 'நிஜமாகவே நீதானா, என் பிரியமே, என்னுடையவளே, என் அன்பே என்றார் லிட்டில்டன். அவர் தயங்கியதிலும் வியப்பில்லை. இந்தச் சில தினங்களில் கிளாரிந்தாவும் வெளுத்து மெலிந்து, அழகிய முகமும் களைப்படைந்து, மாறிப்போயிருந்தாள்.

'என் அன்பே, நானே தான், உங்கள் கிளாரிந்தாவேதான். என் அன்புச் செல்வரிடம் என்றுமே திரும்பி வந்துவிட்டேன் என்று அவருடைய மெலிந்த கரத்தைக் கனிவுடன் எடுத்து' கிளாரிந்தா முத்தமிட்டாள்.

'என்னை மன்னிப்பாயா?' என்று வதங்கிய குரலில் கேட்டார் லிட்டில்டன். குழிவிழுந்த அவர் கண்களினின்று பெரிய கண்ணீர்த் துளிகள் சில உருண்டு விழுந்தன.

'என் அன்பும் மன்னிப்பும் உங்களைத்தவிர வேறு யாருக்கு உண்டு. இக்கட்டான வேளையில் உங்களை விட்டுவிட்டுப் போய்விட்டேனே. நீங்கள்தான் என்னை மன்னிக்க வேண்டும். கடவுள் ஒன்றாக இணைத்தவர்களை இனி மனிதன் ஒருக்காலும் பிரிக்க முடியாது. நாம் இனி பல காலம் அன்பாக வாழ் வோம். காலம் நமது அன்பை இன்னும் வலுவுடையதாக்கும். நான் வந்துவிட்டபடியால் நீங்கள் இனி விரைவில் குணமடைந்து விடுவீர்கள்' என்றாள் மகிழ்ச்சியுடன்.

அவளுடைய கையை எடுத்துத் உணர்ச்சி வசப்பட்டவராய் 'ஆண்டவனுக்குத் தோத்திரம்! ஆண்டவனுக்குத் தோத்திரம்!' என்றார் லிட்டில்டன்.

**விடுதலை**

பழமையான சோழ நாட்டினின்று காட்சி பாண்டிய நாட்டில் உள்ள பாளையங்கோட்டைக்கு மாறுகிறது. நவாபின் ஆதிக்கத்துக்குட்பட்ட திருநெல்வேலி ஜில்லாவை நவாபின் சார்பில் ஆங்கிலேயர் ஆண்டுவந்தனர். அப்பொழுது பாளையங்கோட்டையில் ஒரு சிறிய பட்டாளம் இருந்தது. 1880 வரை அது அங்கே இருந்தது. அங்கிருந்து மூன்று மைல் தொலைவில் தாமிரபரணிக்கு அப்பால் உள்ள தச்சநல்லூரில் இந்திய சிப்பாய்கள் கொண்ட பட்டாளம் ஒன்றும் ஒரு தள நிறுத்தப்பட்டிருந்தது. பாளையங்கோட்டையில் சம்பளப் பட்டுவாடா கர்த்தர், ரெவின்யூ கலெக்டர், அதிகாரி, மற்றும் அதிகாரிகள், சிப்பந்திகள் இருந்தார்கள். எல்லாரும் ஐரோப்பியர்தாம். ஒருவர்க்கொருவர் குதூகலமாகவும் கலகலப்பாகவும் பழகி வாழ்ந்து வந்தனர். லிட்டில்டனுக்கு இப்பொழுது இங்கே மாற்றலாகிவிட்டது.

கிளாரிந்தாவின் கவனமான பணிவிடையால் லிட்டில்டன் விரைவில் உடல் தேறி முன்னைவிட தேகாரோக்கியமாகவும்

உற்சாகமாகவும் இருந்தார். லிட்டில்டனும் துளசாஜியும் நண்பர்களாக இருந்துவந்தது நவாபுக்குப் பிடிக்காமல் இருந்தது. ஆங்கிலேயர் தஞ்சையை முற்றுகையிட்டுப் பிடித்து மூன்றாண்டு காலம் (1773-1776) அதை நவாபுக்கு அளித்து மீண்டும் முடியிழந்திருந்த மராட்டிய அரசனுக்குக் கொடுத்த சம்பவம் இனி நடக்கவிருந்தது. அதற்கான அடிப்படை நிகழ்ச்சிகள் இப்பொழுதுதான் உருவாகிக்கொண்டிருந்தன. இடம் மாறிச் செல்வது இருவருக்குமே பிடித்துத்தான் இருந்தது. பாட்டனாரின் கல்லறைக்குச் சென்று விடை பெற்றுக்கொண்டு, தஞ்சையையும் அதோடு தொடர்புள்ள கசப்பும் வேதனையுமான நினைவுகளையும் விட்டுவிட்டு பாளையங்கோட்டையை நோக்கி தெற்கே சென்றார்கள். சாரதாவும் அவர்களோடு சென்றாள். கிளாரிந்தா விரும்பிக் கேட்டுக் கொண்டதால் சின்னக் கோபாலனையும் அவள் உடன் அழைத்துவந்தாள்.

நகரின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள ஐரோப்பியர் குடியிருப்பு மனைகளில் ஒரு பங்களாவில் லிட்டில்டனின் விசித்திர குடும்பம் வசித்துவந்தது. படைவீடும் அங்குதான் இருந்தது. இப்பொழுதும் அந்தப் படைவீட்டை வெடி மருந்து மற்றும் மருந்துச் சாமான்கள் சேகரித்து வைக்கும் இடமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இப்பொழுது அவர்கள் குடும்ப வாழ்க்கை மிகவும் மாறு பட்டதாக இருந்தது. தஞ்சையில் அவர்கள் சுவார்ட்ஸைப் பார்க்கும் முன்னால் கிளாரிந்தாவின் மகிழ்ச்சி கலப்படமில்லாமல் பரிபூரணமாக- இந்தப் பூமியில் மகிழ்ச்சி என்பது எவ்வளவு சாத்தியமோ- அவ்வளவாக இருந்துவந்தது. ஆனால் லிட்டில்டன் குற்ற உணர்ச்சியினால் உற்சாகம் இழந்தவராய், அதை மறப்பதற்காக நடு நடுவே குடியைத் தஞ்சமடைந்து வந்தார். ஆனால் இப்பொழுது மறைக்கவேண்டிய ரகசியம் இனி ஒன்றும் இல்லை என்ற நிலையில், லிட்டில்டன் உடலும் மனமும் தேறி, தமது குற்றம் அப்படி ஒன்றும் பிரமாண்டமானது இல்லை என்று நினைப்பவர்போல் உற்சாகமாக. இருந்தார்.

அவர் தாம் செய்துவிட்ட குற்றத்துக்காக மனம் வருந்தி அதனால் நோய்வாய்ப்பட்டபோது, கிளாரிந்தாவுக்கு அவர் பால் பரிவும் நேசமும் சுரந்து எப்படியாவது அவர் உடல் நலம் பெற்றால் போதும் என்று கனிவுடன் பணிவிடை செய்திருந்தாள். அவர்கள் அன்புக்கு நடுவே நின்ற ரகசியம் வெளியாகி, எல்லாம் இனிதாக முடிந்துவிட்டதுபோல் தோன்றினாலும், கிளாரிந்தா அவரை முற்றிலுமாக நம்பிய அந்த நம்பிக்கை பங்கமடைந்துவிட்டது. சகல நற்குணங்களும் ஒருசேர உருவெடுத்த வீரதீரர் அவர் என்று அவள் நினைத்திருந்த நினைப்பில் விரிசல் கண்டது.

அவரும் அவளை ஆழ்ந்து நேசித்தார் எனினும் தாம் செய்த அற்பச் செயல் ஒன்றைக் கண்டுபிடித்து விட்டாளே என்றதால் கோபமும் எரிச்சலும் அவரது மன ஆழத்தில் இருந்தே வந்தது என்றே சொல்லவேண்டும். அவளைப்போல் தான் பெருந்தன்மையும் புனிதமும் உடையவன் அல்ல என்ற எண்ணமும் அவரை உறுத்திவந்தது. புல்லாங்குழலில் ஏற்பட்டு விட்ட சிறு விரிசலினால் இசை வருவது தடைபடாவிடினும் அபஸ்வரம் விழுந்து இசையின் இனிமை குறைவதுபோல் மனதில் கண்ட விரிசலால், அவர்கள் செய்த அல்லது செய்யாமல் விட்ட செயல்கள், சொற்கள், சைகைகள், அமங்கலமான மௌனங்கள் அவர்கள் வாழ்வின் இசையைக் கலைக்கத் தொடங்கின.

லிட்டில்டன் மற்ற ஐரோப்பியர்களுடன் பழகத் தொடங்கியதும், லிட்டில்டன்-கிளாரிந்தா உறவில் மேலும் சங்கடங்களும், குழப்பங்களும் ஏற்பட்டன. ஐரோப்பியர்கள் ஆனால் யாரும் அந்த உறவைக் கண்டனம் செய்யவில்லை. லிட்டில்டன் கிளாரிந்தாவை மணந்துகொள்வதை அவர்கள் தடுக்க முயன்றனர். அவர்களில் சிலர் வெளியரங்கமாகவே ஆசைநாயகிகளுடன் வாழ்ந்துகொண்டு அவர்கள் அழகையும் மற்றும் குணநலன்களையும் புகழ்ந்துவந்தார்கள். ஆனால் பாளையங்கோட்டையில் வசித்து வந்த ஐரோப்பியப் பெண் செய்யமாட்டார்கள். மணிகளுக்கு அவர்களை அறிமுகம் அப்படி ஆசைநாயகிகளை வைத்திருப்பவர்கள் அவர்களைப் போன்றவர்கள் வீடுகளுக்கு தங்கள் ஆசைநாயகிகளுடன் போய்வந்து உறவாடி வந்தார்கள். அப்படிப்பட்ட ஐரோப்பியருடன் லிட்டில்டன் எவ்வித சமூக உறவையும் வைத்துக்கொள்ளவில்லை.

ஆனால் இரண்டு மூன்று ஆங்கிலேயர்களிடம் இவர் அந்நியோன்னியமாகப் பழகியதால், இவருடைய வரலாற்றை அறிந்து அவர்கள் இவரிடம் உண்மையாகவே அனுதாபம் கொண்டனர். அப்படிப்பட்டவர்களைத் அழைத்து உபசரித்து, தம் வீட்டுக்கு கிளாரிந்தாவையும் அறிமுகம் 'செய்வித்து அவளுடைய அழகையும் அறிவையும் அவர்கள் பாராட்ட வேண்டும் என்று அவர் விரும்பினார்.

அவர்கள் அவளை அவருடைய மனைவியாகப் போகிறவள் என்ற மரியாதையுடன் நடத்துவார்கள் என்பதுமட்டுமல்ல, அவளுடைய பெருந்தன்மையையும் வாழ்க்கையில் அவள் சகிக்க நேர்ந்த கஷ்டங்களையும் உணர்ந்து அனுதாபமும் காட்டுவார்கள் என்று அவர் எதிர்பார்த்தார்.

ஆனால் அவர் எவ்வளவு கெஞ்சியும் கிளாரிந்தா அதற்கு இணங்கவில்லை. அவள் இன்னும் அவருடைய மனைவியாகவில்லை. உண்மையில் இன்னொரு பெண்ணுக்குச் சொந்தமான மனைவி என்ற அந்தஸ்தைப் பறித்துக்கொண்டு மனைவி போல் நடிக்க அவளால் முடியவில்லை. ஆகையால் அவருடைய நண்பர்களைத் தன் வீட்டில் வரவேற்கவோ, அவர்களோடு வேறு எந்தத் தொடர்பு வைத்துக்கொள்ளவோ அவள் விரும்பவில்லை. இந்த முடிவு அவருக்கு ஆத்திரத்தை விளைவித்தது. வக்கிரமான பிடிவாதத்துடன் வேண்டுமென்றே அவமானப்படுத்துகிறாள் என்று கருதினார். தன்னை அவர் எவ்வளவோ நயமாக எடுத்துச் சொல்லிகெஞ்சிக் கேட்டுக்கொண்டபோதுங்கூட அவள் விட்டுக் கொடுக்காத தால் அவருக்கு மிகுந்த சலிப்பு உண்டாயிற்று. அவளை அசட்டை செய்யத் தொடங்கினார். ஐரோப்பியர் வீடுகளில் அதிக நேரத்தைச் செலவிட்டார் அல்லது அவர்களை அழைத்து கிளாரிந்தாவின் உதவியில்லாமலே தன் வீட்டில் உபசரித்தார்.

ஆடம்பரமான வாழ்க்கையும் பெருங்குடிப்பழக்கமும் நாகரிகமாக நிலவிய காலம் அது. அதிலும் ஆங்கிலேயர்கள் குடிப்பதில் எவருக்கும் சளைத்தவர்கள் அல்ல. அவர்கள் கவிஞர் சொல்வதுபோல், குடியில் டேனிஷ்காரரும், ஜெர்மானியரும், தொந்திசரிந்த ஹாலந்தியரும் ஆங்கிலேயர்முன் நிற்க முடியாது

என்று தம்பட்டம் அடித்துக்கொள்வார்கள்.

லிட்டில்டனுக்கும் அளவுக்குமீறிய குடி, குடும்ப வாரிசான இயல்பு. கிளாரிந்தாவோடு நேர்ந்த சச்சரவுகளினால் துயர மடைந்தவராய் மேலும் குடித்தார். நாம் நேசிக்கும் ஒருவரிடம் கோபம் கொள்வது, மூளையில் வெறிபிடித்ததுபோல் வேலைசெய்யும் என்று சொல்வார்கள். ஆகவே லிட்டில்டன் உடல் நலம் மீண்டும் கெடத் தொடங்கியது. கிளாரிந்தா எவ்வளவு சொல்லியும் லிட்டில்டன் குடிப்பதை நிறுத்தவில்லை.

நடு நடுவே அவர்கள் சமாதானம் செய்துகொண்டார்கள். முத்தங்களினாலும் கண்ணீராலும் உடன்படிக்கைப் பத்திரம் எழுதிக்கொண்டார்கள். ஆனால் இந்தப் பத்திரங்கள் வெகு நாள் செல்லுபடியாகவில்லை. ஏனென்றால் அவர்களுடைய சச்சரவுகள் புதுமணத் தம்பதிகள் வரவேற்க வேண்டிய ஊடல்களாக இல்லை. ஆகவே புல்லாங்குழலில் கண்ட விரிசல் நாளடைவில் விரிந்து விரிந்து இசையே வரவொட்டாமல் தடுத்துவிட்டது. அவருடைய புது நண்பர்களின் உறவையும் குடியையும் அவரால் விட்டுவிட முடியவில்லை. தஞ்சையில் அவர் பட்ட நோயின் கடுமையையும், அப்பொழுது கிளாரிந்தா அடைந்த மனத்துயரத்தையும்கூட அவர் நினைத்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. இதனால் அவளுக்கு அவர்மீது மனக்கசப்பு மிகுதியாயிற்று.

அவள் இப்போது நெடுநேரம் தனிமையில் வாடியதால் மனதில் அலுப்பும் தளர்ச்சியும் அடைந்தாள். அவர் வெளியே சாப்பிடுகிற இரவுகளில், அவர் திரும்பும்வரை அவள் அழுது கொண்டே விழித்திருந்தாள். தன் பிரிய பாயியின் துக்கத்தையும், அவமானத்தையும், வேதனையையும் சாரதாகூட கிளாரிந்தா சின்னக் முழுவதும் அறிந்துகொள்ளவில்லை. கோபாலன் மீது இப்பொழுது மிகவும் பிரியம் வைத்தாள். அந்தச் சிறுவனுக்கு வயதை மீறிய நகைச்சுவை இருந்தது. அவனுடைய குழந்தமைப் பேச்சும் செயலும்தான் அவ்வப் போது அவள் முகத்தில் புன்சிரிப்பைத் தோன்றச் செய்தன.

மனச்சாட்சி அறியாத குற்றம் இல்லை. குற்றம் செய்கிற வர்கள் முதலில் மனச்சான்றுக்கு ஏதாவது சாக்குச் சொல்லி மழுப்புகிறார்கள். நோக்கமே இல்லாத பழிச் செயல் செய்ததாகச் சொல்லப்படும் இயாகோகூட மனச்சான்றை சமாதானப்படுத்த ஏதேதோ நோக்கங்கள் கற்பித்துக்கொண்டான். ஆனால் லிட்டில்டன் கொடுமைக்காரர் அல்ல. தன்னைப் புரிந்துகொள்ளவில்லையே என்றுதான் அவருக்கு கிளாரிந்தா மீது கோபம். அதனால்தான் அவரையும் அறியாமலே அவர் அப்படிப் பழி தீர்த்துக்கொண்டிருந்தார். தமது கசப்பான வில்லங்கம் நீங்கியதும், அவர் அவளைத் திருமணம் செய்து கொண்டு அவள் ஞானஸ்நானமும் பெற்றுவிட்டால், அவள் முறைப்படி கண்ணியமான மனைவியாகிவிடுவாள். அப்பொழுது அவளுடைய சோர்வு, கெட்ட கனவைப்போல் நீங்கிவிடும். வறட்டுக் கொள்கையைக் கொண்ட மிஷனெரிப் பாதிரியாரைச் சந்திக்குமுன் அவர்கள் தஞ்சையில் அநுபவித்த இன்பநாட்கள் திரும்பிவிடும் என்றுதான் அவர் எண்ணியிருந்தார். அவருடைய மனச்சாட்சியை அவர் இப்படித்தான் சமாதானம் செய்து வைத்திருந்தார்.

ஆனால் அவர் எண்ணியது நடக்கவில்லை. பாளையங்கோட்டை வந்த ஒரு வருடத்துக்கெல்லாம் அவரை மீண்டும் சூலை நோய் கடுமையாகத் தாக்கியது. தன் குடும்பத்தில் இருவர் இந்நோயினால் இறந்துபோயினர் என்பதையும் அவர் அறிவார்.

ஒன்றும் இயலாதவராய் படுக்கையாய்ப் படுத்துவிட்டார். முந்தியதைவிடத் தீவிரமான தாக்குதலாக இருந்ததால், வேதனையும் தாங்கமாட்டாமல் இருந்தது. கிளாரிந்தாவின் மனம் இளகிவிட்டது. இரவும் பகலும் அருகிலேயே இருந்து பணிவிடை செய்தாள். அவர் நோயின் கடுமையால் அவளிடம் எரிந்து விழுந்தபோது பொறுமையுடன் இருந்தாள். வைத்தியரின் உத்தரவுகளை அப்படியே நிறைவேற்றினாள். அவருடைய நண்பர்கள் வந்தபோது அவரைவிட்டு விலகி ஒளிந்துகொள்ளவில்லை. அவள் பக்தியுடன் செய்த பணி விடைகளையும், அமைதியான கம்பீரத்தையும் கண்டு எல்லோருமே வியந்தனர். ஜியார்ஜ் வெஸ்ட்காட், லிட்டில்டனின் நண்பர். அவர் கிளாரிந்தா லிட்டில்டனுக்குச் செய்து வரும் பணிவிடை கண்டு வியந்தார். அவள் ஒருதடவை ஒத்தடம் கொடுப்பதற்காக அபின் கொண்டுவர உள்ளே சென்றபோது ஜியார்ஜ் வெஸ்ட்காட், லிட்டில்டன்! நீ கொடுத்து வைத்தவன், இவ்வளவு பக்தியுடன் பணிவிடை செய்ய ஒருத்தி உனக்குக் கிடைத்திருக்கிறாளே. இப்படிக் கவனிப்பதற்கு ஒருவர் இருக்கும்போது, நோயாளியாகக் கிடப்பதே பெரிய சுகமாக இருக்கும்' என்றார்.

'கடவுள் அவளை ஆசீர்வதிப்பார். அவளுக்கு நான் தகுந்தவன் அல்லன்' என்றார் லிட்டில்டன்.

அதிகப்பிரசங்கித்தனமாகக் கேட்கிறேன் என்று நினைக்காதே. அவள் வசதி உள்ளவள்தானா?' என்று மெல்லக் கேட்டார்.

'அவள் பாட்டனார் அவளுக்கு ஏகப்பட்ட சொத்து வைத்துவிட்டுப்போனார். ஆனால் தஞ்சாவூர் இராஜா அதில் பாதியைப் பிடுங்கிக்கொண்டுவிட்டார். மறுபாதியை தரும காரியங்களுக்கு அவளாகவே கொடுத்துவிட்டாள். தனக்கென்று மிகச் சிறிய பாகம் மட்டும் வைத்திருக்கிறாள். இப்பொழுது தஞ்சை இராஜ்ஜியம் நவாபின் கைவசம் வந்த பிறகு அங்கிருந்து இன்னும் ஒரு செப்புக்காசுகூட வரவில்லை. நான் என்னுடைய சொத்தை எல்லாம் அவளுக்குத்தான் விட்டுச் செல்லுகிறேன். அவளைத் திருமணம் செய்து கொள்ளும்வரையாவது இந்த நோய் என்னை விழுங்காமல் இருக்கவேண்டும். அதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது. அவளை முறைப்படி மணந்துகொண்டால்தான் நான் நிம்மதியாக உயிரை விடுவேன்' என்றார் லிட்டில்டன்.

'ஆகா! அவள் அதற்கும், அதற்கு மேலும் தகுதி உடையவளாகவே தோன்றுகிறது. உனக்கு என்னை நன்றாகத் தெரியும். நம்மவர்கள் இந்தியப் பெண்களை மணந்துகொள்வது எனக்குப் பிடிக்காது. ஆனால் உனக்கு நேர்ந்திருக்கும் நிலையில் அங்ஙனம் மணஞ்செய்து கொள்வது அனுமதிக்க வேண்டியதுமன்றி கடமையுமாகும் என்று சொல்வேன்.

**தொடரும் ...**

# இதயத்தைக் கவர்ந்த

# ஒரு சிறிய வகுப்பறை

## – Rhoda Alex



சமீபத்தில் மணிப்பாலில் உள்ள ஹஸ்தாஷில்பா பாரம்பரிய கிராமத்திற்கு (Hasta Shilpa Heritage Village) சென்றிருந்தோம். இது ஒரு அருங்காட்சியகம், இங்கு கர்நாடகாவின் 24 பாரம்பரிய வீடுகளை புனரமைத்து பாதுகாக்கப்படுகின்றன. (சென்னையில் உள்ள தக்ஷிணசித்ராவைப் போன்றது). 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளின் சிறந்த கட்டிட வேலைப்பாடுடைய வீடுகள், அக்காலக்கட்டத்தில் இருந்த பெட்டி கடைகள் மற்றும் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இந்த பெரிய வீடுகளுக்கு இடையில், **பேசல் மிஷன்** தொடக்கப்பள்ளி என்ற தலைப்பில் ஒரு சிறிய அறையும் பாதுகாக்கப்பட்டுள்ளது. அதைப் பார்த்து நான் அதிர்ந்து போனேன். தங்கள் அருங்காட்சியகத்தின் ஒரு பகுதியாக பழைய மிஷன் பள்ளி வகுப்பறையை சிந்தனையுடன் சேர்த்துள்ள அருங்காட்சியகத்தின் கண்காணிப்பாளர்களுக்கு என் நெஞ்சார்ந்த பாராட்டுகள்.

பேசல் மிஷன் என்பது ஜெர்மனியில் உள்ள ஒரு புராட்டஸ்டன்ட் எவாஞ்சலிக்கல் மிஷனரி அமைப்பாகும். 1834 முதல் மலபார் கடற்கரையில் (கர்நாடகா, கேரளா) பரவலாக இந்த பேசல் மிஷன் ஊழியர்கள் வேலை செய்தார்கள். அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்ட சிறிய வகுப்பறை இந்த மிஷனரிகளால் ஆரம்பிக்கப்பட்ட கல்வியின் சமத்துவத் தன்மைக்கு ஒரு அழகான சான்றாகும். மிஷனரிகளால் அனைவருக்கும் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வியின் விளைவு கர்நாடகாவில் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அருங்காட்சியகம் அமைந்துள்ள மணிப்பால் கூட இப்போது புகழ்பெற்ற உயர் கல்விக்கு பிரசித்துப்பெற்ற ஊராகிவிட்டது. கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல எல்லா மதத்தினரும் இப்போது கல்வி பணி செய்கின்றனர். மிஷனரிகளின் முக்கிய நோக்கம் இயேசுவின் நற்செய்தியைப் பகிர்ந்துகொள்வது என்றாலும் - அவர்கள் சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகளுக்காகவும் உழைத்தனர் - கல்வி, சுகாதாரம் மற்றும் வேலைப் பயிற்சி மூலம் மக்களுக்கு உயர்வை அளித்தனர்.



அனைத்து குழந்தைகளும் ஒன்றாக அமர்ந்து படிக்கும் எளிய வகுப்பறை அழகாக பாதுகாக்கப்பட்டுள்ளது. சிறிய பெஞ்சுகள், ஒரு கரும்பலகை, உடற்கூறியல் மாதிரிகள், ஆசிரியருக்கான மேஜை மற்றும் நாற்காலியுடன் கூடிய சுவாரஸ்யமான விளக்கப்படங்கள். தொங்கிக்கொண்டிருந்த விளக்கப்படங்கள் (charts) பழமைமிக்கதாய் இருந்தன. ஒரு ஜெர்மன் மொழி விளக்கப்படமும் இருந்தது. அஜந்தா குகைகளைக் காட்டும் ஒரு விளக்கப்படமும் இருந்தது. 150 ஆண்டுகளுக்கு முன்பே இது போன்ற பரந்துப்பட்ட தகவல்களைச் சுமந்து குழந்தைகளுக்குக் கிடைக்கச் செய்து அவர்களின் சிந்தனையை விரிவுபடுத்திய இந்த சிறிய வகுப்பறை பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றே !

ஒரு கிறிஸ்தவளாக, நான் இன்று மக்களுக்கு எவ்வாறு தொடர்ந்து சேவை செய்கிறேன் என்ற கேள்வியை எனக்கு நானே கேட்டுக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

## வட திருநெல்வேலி மிஷன் சுற்றுப்பயணம்

# மிஷனெரி கனம். T. G. இராக்லாந்து

### பிறந்த தினத்தில் ...

தென்னிந்திய திருச்சபை திருநெல்வேலி திருமண்டலத்தின் பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் வட திருநெல்வேலி என்று அழைக்கப்படும் சிவகாசி பகுதிக்கு மிஷனெரி கனம். T. G. இராக்லாந்து பிறந்த தினத்தை முன்னிட்டு இன்று (23.04.2023) கல்லிடைக்குறிச்சி சேகரத்தை சேர்ந்த அருள்திரு P. D. முத்துராஜ் ஐயரவர்கள் சேகர தலைவர் தலைமையில் வட நெல்லை பகுதிகளில் இறைப்பணியாற்றிய மிஷனெரிகள் நினைவிடங்களையும் அவர்கள் உருவாக்கிய பணித்தளங்களையும், ஆலயங்களையும், இன்றைக்கு இருக்கும் திருச்சபை வளர்ச்சிப் பணிகளையும் பார்வையிடுவதற்கு கல்லிடைக்குறிச்சி சேகர தலைவர் அருள்திரு P. D. முத்துராஜ் ஐயரவர்கள் அவர்கள் தலைமையில் சுமார் 80 பேர் வரை சென்றிருந்தோம்..

காலை எட்டு முப்பது மணி அளவில் சென்றிருந்த அனைவருக்கும் திருவேங்கடம் தேவாலயத்தில் காலை சிற்றுண்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஒன்பது மணி அளவில் திருவேங்கடத்தில் இருந்து புறப்பட்டு 9.15 மணியளவில் மேலாண்மறைநாட்டில் தமது 21 வயதில் முதலூர் சேகர மிஷனரியாக வந்து 33 ஆண்டுகள் மேலாண் மறைநாடு மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் மிகச்சிறப்பாக மிஷனரி பணியை செய்து ஏராளமான தேவாலயங்களை கட்டி எழுப்பிய திரு. ஆனந்த பாண்டியன் அவர்களது கல்லறை இருக்கும் மேலாண்மறைநாடு தேவாலய வளாகத்திற்கு வந்து சேர்ந்தோம். அங்கு திரு. ஆனந்த பாண்டியன் அவர்கள் செய்த ஊழியங்கள் குறித்து கல்லிடைக்குறிச்சி சேகர தலைவர் அருள் திரு. P.D முத்துராஜ் ஐயர் அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள். பின்னர் அவர் காலத்தில் கட்டப்பட்ட அந்த ஊர் தேவ ஆலயத்தில் வைத்து சிறப்பு ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

அதன் பின்னர் நேரே சிவகாசி சாட்சியாபுரம் ஆலயத்திற்கு சென்றோம். எங்களை சாட்சியாபுரம் கிழக்கு வட்டகை தலைவர் அருள்திரு. A. டேவிட் ஜெபராஜ் ஐயரவர்கள் மற்றும் சேகர பிரதிநிதிகள் சிறப்பாக எங்களை வரவேற்று உபசரித்தார்கள்.

அங்கு கோதுமை மணியாக விதைக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்டம், பாட்டக்கரை என்னும் கிராமத்தில் ஜூன் 15, 1844-ல் பிறந்த தானியேல் பவுல் உபதேசியாகத் திகழ்ந்தவரின் (பிற்காலத்தில் குருவானவர்) 6 வது மகன் அருள்திரு. சாமுவேல் பவுல் ஐயர் அவர்கள் நினைவிடத்தில் அவர்களின் வரலாற்றை அருள்திரு. A. ஜெபரத்தினம் அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள்.

வேதாகமத்திற்கு அடுத்தப் படியாக உலகமுழுவதும் பேசப்படும் ஜான் பனியன் எழுதிய Pilgrims Progress நூலின் உரைநடைவடிவ தமிழில் மோட்சப் பிரயாணம் நூல் சிறப்பு வாய்ந்த மொழிபெயர்ப்பு செய்தது இவரே. இன்றைய தபசு நாட்களில் நமது திருமண்டல ஆலயங்களில் அதிகாலையில் வாசிக்கப்படும் ஆத்துமநேசரின் அங்க மகத்துவம் என்ற நூலில் ஆசிரியரும் இவர்தான். மேலும் இவர் பதினாறு நூல்கள் வரை எழுதியுள்ளார். 1890 முதல் நற்போதகம் இதழின் ஆசிரியராகவும்,





தமிழின் முதல் சிறுகதை ஆசிரியராகவும் மற்றும் குருத்துவ பணியுடன் இலக்கிய பணியும் செய்த அருள்திரு. சாமுவேல் பவுல் ஐயர் அவர்களை நினைவு கூர்ந்தோம்.

அடுத்ததாக நற்செய்தி பணியில் வெற்றியடைய தீட்டும் திட்டங்களில் மிகச் சிறந்த வழி இயேசு காட்டிய வழியே. அது கோதுமை மணிபோல் நிலத்தில் விழுந்து சாவதே என்று சொன்ன வட திருநெல்வேலி அப்போஸ்தலன் கனம் T. G. ராக்லாந்து ஐயர் நினைவிடம் சென்றோம். அங்கு வரலாற்றுச் சங்க உறுப்பினர் மன்னா செல்வகுமார் அவர்கள் ராக்லாந்து வரலாற்றை பகிர்ந்து கொண்டார்கள்.

வட திருநெல்வேலியில் சுற்றித் திரிந்து நற்செய்தி சொல்லும் முறையின் மூலம் கிராமங்களுக்கு நற்செய்தியை பறைசாற்றியவர். கற்களும், தூசிகளும் அவரை நோக்கின. தடியால் சரமாரியாக அடிகள் வாங்கியவர். நடக்கக் கூட தெரியாத சிறு பையனும் கூட கல்லைத் தூக்கி எறிந்ததுதான் பரிதாபம். மழை, வெயில், பசி, அவமானம், பேச்சுக்கள், சரீர துன்பங்கள் எதையும் பொருட்படுத்தாது தன் ஊழியப் பணியைத் தொடர்ந்தவர். அதிகாலையில் எழுந்து ஜெபிக்கும் பழக்கமுடையவர். ஆயிரத்திற்கு மேற்பட்ட கிராமங்களில் சுவிசேஷத்தை அறிவித்த சுவிசேஷச் செம்மலின் பணிகளையும் நினைவு கூர்ந்தோம். எங்களை வரவேற்ற ராக்லாந்து சேகர தலைவர் அவர்களுக்கும் டாக்டர். ஜியோ ஞானதுரை ஐயா அவர்களுக்கும் நன்றி.

வட திருநெல்வேலி சுற்றுப்பயணத்தின் முக்கிய பனித்தளமான பனையடிப்பட்டிக்கு வந்து சேர்ந்தோம். ஜான் தியாப்பிலஸ் ஜார்ஜ் பேரன் பூரூக் ஐயரவர்கள் இந்தியாவில் நமது தமிழ்நாட்டில் 1844 - 1858 வரை திருநெல்வேலி மாவட்டம் சுரண்டை பகுதிகளில் ஏறத்தாழ 14 ஆண்டுகள் மிஷனரிப் பணி செய்து, பின் ஓராண்டு சிவகாசி பகுதியில் பணியாற்றி, விருதுநகர் மாவட்டம் பனையடிபட்டி கிராமத்திற்கு அருகிலுள்ள செந்தட்டி அய்யனார் கோவில் என்ற கிராமத்தில் அருட்பணி செய்ய சென்றபோது காலரா நோயினால் பாதிக்கப்பட்டு 1858 மார்ச் 29ம் தேதி, தனது 40 வது வயதில் மரித்துப் போன பேரன்பூரூக் அவர்களை நினைவு கூர்ந்தோம்.

வட திருநெல்வேலி ஊழியங்களின் நட்சத்திரங்களில் ஒருவரான கனம்.எவ்ரி (Every) அவர்களின் கல்லறை மற்றும் கர்த்தரின் பந்தியில் வா சகோதரா கர்த்தரின் பந்தியில் வா என்ற பாடலும் மற்றும் நல்ல பல கீர்த்தனைகளை நமக்கு தந்த ஸ்ரீவைகுண்டம் மேசியா நகர் மரியான் உபதேசியார் அவர்களின் கல்லறை மற்றும் பாட்டகரை அருள்திரு. விசுவாசம் ஞானமுத்து ஐயா அவர்களின் நினைவிடத்தில் மரியாதை செலுத்தி அவர்கள் செய்ய பணிகளை நினைவு கூர்ந்தோம்.

எங்களை வரவேற்ற பனையடிப்பட்டி சேகர குரு அருள்திரு. பிரவீன் அவர்களுக்கும் அதன் பின்பு திருவேங்கடம் சேகர குரு மதிய உணவு மிக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த ஐயரவர்க்ளுக்கும் மிகுந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மிஷனெரி கனம். T. G. இராக்லாந்து பிறந்த தினத்தை முன்னிட்டு வட திருநெல்வேலி சுற்றுப்பயணமாக திருச்சபை மக்களை ஊக்குவித்து, குறுகிய காலத்தில் திட்டமிட்டு ஏற்பாடு செய்து இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பார்க்கவும் பல்வேறு பணிகளின் மத்தியிலும் சபை மக்களை அன்போடு அழைத்து வந்த கல்லிடைக்குறிச்சி சேகர தலைவர் அருள்திரு P. D. முத்துராஜ் ஐயரவர்களுக்கும் உதவி செய்த சாம்பவர்வடகரை சேகர குருவான அருள்திரு. A. ஜெபரத்தினம் ஐயரவர்களுக்கும் மற்றும் வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கும் சபை மக்கள் ஒவ்வொருவருக்கும் வரலாற்றுச் சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.







## பெண்களுக்கு கல்விக்கண் கொடுத்த

# துப்புய் பாதிரியார்

ராஜ்ஜா



பல நாடுகளில் இருந்து தமிழகம் வந்த கிறிஸ்துவப் பாதிரியார்கள் தங்களது மதத்தைத் பரப்பத்தான் தமிழ் மொழியைக் கற்றார்கள். தமிழ்ச் செய்யுள் வளம் பெற்றிருந்த காலத்தில் தமிழகம் வந்த இப்பாதிரியார்கள் தமிழின் பேச்சு மொழி வேறு எழுத்து மொழி வேறு என்பதனை மிகச் சுலபமாகத் தெரிந்து கொண்டனர். எழுதப் படிக்கத் தெரியாத பாமர மக்களிடம் தாங்கள் வந்த நோக்கத்தை எடுத்துரைக்க எழுத்து மொழி கவைக்கு உதவாது என்பதையும் அவர்கள் அறிவுபூர்வமாக உணர்ந்தனர். எனவேதான் மக்களுக்குச் சுலபமாகப் புரியும் பேச்சு மொழியில் எழுத ஆரம்பித்தனர். ஆக பண்டிதத் தமிழை பண்டிதர்களிடமே விட்டுவிட்டு மக்கள் தமிழை மக்களிடம் எழுத்து மூலம் கொண்டு போய் சேர்த்தவர்கள் அயல்நாட்டு கிறிஸ்துவப் பாதிரியார்களே.

பேசுவதைப் போலவே எழுத வேண்டும் என்பது ஓர் இயக்கமாகவே மாறிப்போனது. வீரமாமுனிவரின் பாரமார்த்த குரு கதை இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. பண்டிதத் தமிழ் அறிஞர்கள் மக்கள் தமிழை பாதிரியார் தமிழ் என்று சொல்லி நையாண்டி செய்த வரலாறும் உண்டு. அஞ்சா நெஞ்சம் கொண்ட பாதிரியார்கள் தங்கள் பணியினை சிறப்பாகவே தொடர்ந்தார்கள்.

பாதிரியார்கள் இலக்கியம் படைத்ததோடு மட்டுமல்லாமல் மருத்துவம், வான சாஸ்திரம், சரித்திரம், பூகோளம், தர்க்கம், தத்துவம் என்று பல துறைகளிலும் தங்கள் தனித்திறமையைக் காட்டினர். தமிழ் இலக்கியம் வளர்ந்தது. தமிழ் மொழியும் வளர்ந்தது. பாதிரியார்கள் தமிழ் மொழியின் மீது கொண்ட காதலால்தான் நாட்டுப் புற இலக்கியத்தைக்கூட விட்டு வைக்காமல் பாடல்கள், பழமொழிகள், கதைகள், விடுகதைகள், கதைப்பாடல்கள் என்று பாமரர் சொல்லக் கேட்டு அதற்கு எழுத்து வடிவம் கொடுத்து, பின்னர் அதில் பலவற்றை ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற மொழிகளில் ஆக்கமும் செய்தனர். மேலும் இன்று நமக்கு நம் தமிழில் உரைநடை நூல்கள் வாசிக்க கிடைப்பதற்கு காரணகர்த்தாவே அவர்கள்தான்.

ஒரு காலத்தில் செல்வந்தர்களிடம் மட்டுமே இருந்த பனை ஓலைச்சுவடிகளை இன்று வெள்ளைத்தாளில் அச்சிடப்பட்டு புத்தகமாக்கி பாமரர்களின் கையிலும் தவழவிட்டவர்கள் இந்த அயல்நாட்டு பாதிரியார்களே. வந்தாரை வரவேற்று வாழவைக்கும் தமிழ் அன்னை அவளது வளர்ச்சிக்கு அரிய பல காரியங்களைச் செய்து அரும்

பெருந்தொண்டாற்றிய கிறிஸ்துவப் பாதிரிமார்களை நன்றிப் பெருக்குடன் இருகரம் தூக்கி என்றும் ஆசிர்வதிப்பாள்.

தமிழன்னையின் ஆசி பெற்ற அயல்நாட்டு பாதிரிமார்களின் வரிசையிலே முக்கிய பங்கு வகிப்பவர் பிரான்ஸ் நாட்டில் இருந்து புதுச்சேரிக்கு வந்து தமிழ் மக்களுக்கு முக்கியமாக தமிழ்ப் பெண்களுக்கு கல்விக்கண் திறந்து வைத்த இறை ஊழியர் லூயிஸ் சவீனியன் துப்புய்.

பிப்ரவரி 2, 1832-ல் புதுச்சேரி வந்தடைந்த துப்புய் அடிகளார் எண்பது நாட்களிலேயே தமிழ் பயின்று இம்மொழியில் நல்ல புலமையும் பெற்றார். பிரெஞ்சு மொழியை தாய் மொழியாகக் கொண்ட இவருக்கு ஆங்கிலத்தோடு தெலுங்கு, கன்னட மொழிகளும் அத்துபடி.

புதுமை நிறைந்த சிந்தனைகளை புதுவையில் புகுத்திய மகான் இவர். 1841-ல் மிஷன் பிரஸ் என்ற அச்சகத்தை நிறுவி அதன் மேலாளராக தன் இறுதி மூச்சை இறைவனிடம் ஒப்படைத்த நாளான ஜூன் 4, 1874 அன்று வரை தொடர்ந்து செயல்பட்டார். இந்த முப்பத்து மூன்று ஆண்டு காலத்தில் அவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டினைப் போற்றுவதற்கு வார்த்தைகள் கிடையாது. ஏராளமான நூல்களை தமிழ் மொழியில் எழுதியதோடு, பல நூல்களை தமிழில் மொழிபெயர்த்தார். பல நூல்களை பதிப்பித்தார். வேறு பலர் எழுதிய நூல்களை வெளியிட்டார். இன்றும் பலரது வீட்டு நூலகத்திலே கம்பீரமாக வீற்றிருக்கும் தமிழ்-பிரெஞ்சு மற்றும் பிரெஞ்சு- தமிழ் அகராதிகள் இவர் தயார் செய்து அச்சிட்டவையே. இல்லற உத்தியானம் படைத்தவர் துறவற உத்தியானம் என்ற நூலை இரண்டு காண்டமாக எழுதினார். தமிழுக்கு தொண்டாற்றிய இந்த மேலைநாட்டு மூதறிஞர் தான் வெளியிட்ட நூல்கள் அனைத்தையும் மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற நோக்கில் மகத்தான வேறொரு காரியமும் செய்தார்.

ஒரு பெண்ணுக்கு கல்வி கொடுத்தால் ஒரு குடும்பமே கல்வி பயிலும் என்ற எண்ணம் துப்புய் அடிகளாரின் மனதிலே உதித்திருக்க வேண்டும். காரணம் அவர் வாழ்ந்த புதுச்சேரியிலே பெண்கள் அறியாமை எனும் இருளிலே மூழ்கடிக்கப்பட்டிருந்தனர். எல்லாம் ஆண் ஆதிக்கத்தினால் வந்த வினைதான். பெண்களுக்குக் கல்வி.. ஆண் ஆதிக்கம் ஒழிக என்று கூக்குரல் இட்டு விட்டு அதன் பின் அதைப்பற்றி ஒன்றுமே கண்டு கொள்ளாமல் சென்று விடும் அரசியல்வாதி இல்லை துப்புய் அடிகளார். தான் சிந்தித்ததை செயலில் காட்டியவர்தான் இந்த இறை ஊழியர். செய்யும் தொழிலே தெய்வம் என்ற கூற்றில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்.

பெண்களின் முன்னேற்றத்திற்கு முக்கியத்தேவை கல்வியே என்று இந்திய திருச்சபையை உணரவைத்தார். தேவையை உணர்ந்த திருச்சபை அதன் முழுப்பொறுப்பையும் அவரையே ஏற்றுக் கொள்ளுமாறு பணிக்க, அவரும் அப்பணியினை சிறப்பாகச் செய்ய முடிவு செய்து, முதல் கட்டமாக மரியன்னையின் தூய இதய பிரான்சிஸ்கன் சகோதரிகள் சபையை 16.10.1844 அன்று நிறுவினார். இது பெண்களுக்கான துறவற சபை. இறைப் பணிக்காகவே தங்களை முழுமையாக ஒப்படைக்கும் பெண்கள்தான் பெண் குழந்தைகளுக்கு கல்வி கொடுக்க தகுதியானவர்கள் என்று நினைத்தார் போலும். மறுநாளே (17.10.1884) புதுச்சேரியில் இமாக்குலேட் பெண்கள் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. மிஷன் வீதியில் உள்ள இப்பள்ளியே இமாக்குலேட் சபையின் முதல் பள்ளி.

வெறுங்கை முழம் போடுமா? கன்னியர்களை போஷிக்க, பள்ளி நடத்த பணம் வேண்டுமே! தேவையை பூர்த்தி செய்ய இறைவனை நாடுகின்றார் பாருங்கள்:

'இந்திய இளம்பெண்களின் கல்வி முன்னேற்றத்தைப் பற்றி நீண்டகாலமாய் வகுக்கப்பட்ட திட்டத்திற்கேற்ப, புதிய மடமொன்று சென்ற புதன்கிழமையன்று நிறுவப்பட்டது. இந்நாட்டில் இதுதான் முதலாவதும் முதன்மையானதுமான நிறுவனமாகும். இதை நிறுவுவதற்குப் பெரும் போராட்டங்களை வெல்ல வேண்டி இருந்தது. இனிவரும் போராட்டங்களையும் எதிர்க்க வேண்டியதுதான். தற்போது இச்சபை மடத்தில் நான்கு கன்னியர்கள் உள்ளனர். இன்னம் இதில் சேர விரும்புவோர் பலர் இருப்பினும் பணம் இன்மையால் அவர்களைச் சேர்க்க முடியவில்லை. அவர்களின் உணவு முதலிய தேவைகளை எவ்வாறு நிர்வகிப்பதென்று தெரியவில்லை. தெய்வ பராமரிப்பில் ஒப்படைத்திருக்கிறேன். இது வீணாகாது. ஏனெனில், இதன் பயனை நான் பலமுறை கண்டடைந்தேன்.

'கன்னியர்களின் உணவு செலவுடன் வீட்டு வாடகைக்கு மாதம் ரூ.3 அதாவது 72 Frs. செலவாகிறது. தாராள மனப்பான்மை உள்ளவர்கள் தர்மமாக அல்லது கடனாக 1000 Frs கொடுத்தால் இந்நாட்டிற்குப் பெரும் நன்மை செய்தவர்கள் ஆவார்கள். ஏனெனில், இந்நாட்டில் பெண்களுக்கு கல்வி என்பதே இல்லை. இதனால் குடும்பங்களில் ஒழுக்கமும் பக்தியும் அமைதியும் இல்லை. பெண்கள் அறியாமையில் ஆழ்ந்து அதிலே தள்ளாமையும், கல்லறையும் அடைகிறார்களெனில், இத்தகைய அறியாமை உடைய நாட்டில் பக்தியும், ஒழுக்கமும், வேதமும் எவ்வாறு ஊன்றித் தழைக்க முடியும். நீங்கள் யூகித்துக் கொள்ளுங்கள்...'

18.10.1844 தேதியிட்ட இந்தக் கடிதம் அவரது இறை நம்பிக்கைக்கும் தன்நம்பிக்கைக்கும் சான்றாக அமைகின்றது. புதுச்சேரியில் பெண்களின் நிலை பற்றியும், அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கல்வி பற்றியும், இவர்களுக்கு எழுத்தறிவிக்கவே தோற்றுவிக்கப்பட்ட சகோதரிகள் சபை பற்றியும், சகோதரிகளின் புண்ணிய வாழ்விற்கு தேவையானவற்றையும் துப்புய் அடிகளார் அருட்சகோதரர் ஒருவருக்கு எழுதிய இக்கடிதத்தின் மூலம் அறிய முடிகிறது.

பெண்களுக்கு ஏன் கல்வி? பெண்களுக்கு பெண்களால்தான் கல்வி புகட்ட இயலுமா? போன்ற கேள்விகளுக்கு, துப்புயி அடிகளார் விசுவாச பரப்புதல் சபையின் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் (18.10.1844) விலாவாரியாகவே குறிப்பிடுகின்றார்:

'பெண்கள் கல்வி கற்கக்கூடாதெனும் தகாத கொள்கை என்று இந்தியர் உள்ளத்தில் வேரூன்றி இருப்பதால், படித்த பெண் ஒருத்தி தனக்கு ஒருத்தி தனக்கு வாசிக்கத் தெரியும் என்று சொல்ல வெட்க மடைகிறாள். இந்தப் பரம்பரையான இழிவினின்று பெண்களை மீட்க ஒரு நிறுவனம் தேவையென்று தீர்மானித்தனர். இந்த நிறுவனத்தின் வழியாகத்தான் இந்தியப் பெண்களின் கல்வியையும், புத்தியையும் வளர்த்து அதனால் அவர்கள் தங்கள் தன்மானத்தையும், மேன்மையையும் உணர்ந்து, அதனைத் அடையகூடுமென்று நிச்சயித்து. தன் குடும்பங்களில் பகிர்ந்து கொள்ளும் தன்மை நிறுவனத்தை ஏற்படுத்தும் பணியை என்னிடம் 'ஆசித்த நன்மையை அடைவதற்கு இந்திய பெண்களின் துறவறசபை ஒன்று ஏற்படுத்துவதே மேலான மேலான வழியென்று வழியென்று உணர்ந்தேன்.'

இறைவனுக்குத்தன்னைஅர்ப்பணிக்கநோக்கமுள்ள சில பெண்களைத் தயாரித்தேன். இதற்கு ஏற்பட்ட இடையூறு எவ்வளவு பெரியதென்னில், தொடக்கத்திலேயே பலமுறை வீழ்ச்சி அடைந்தது போல் தோன்றிற்று. இறுதியாக St.et Immacule Coeur de Marie தூய அமல இதய மரியன்னை சபை என்ற பெயருடன் இளம் பெண்களின் இலவசக் கல்விக்காக இந்திய கன்னியர் சபை மடம் திறக்கப்படுவதை கோவில் மணியோசை புதுவைக்கு அறிவித்தது.'

மேலும் இக்கடிதத்தின் கடைசி பகுதியில் 'படித்த பெண் தன் பிள்ளைகளுக்கு முதல் ஆசிரியையாயிருப்பாள். இத்தகைய நன்மைகளைக் கண்கூடாய் பார்க்கின்றோம். இந்து பெண்களிடம் பெண்களேயன்றி மற்றவர்கள் பேசமுடியாது. எனவே இத்தகைய நல்ல கத்தோலிக்க பெண்கள் இந்து பெண்களுக்கு விசுவாசத்தை அளித்து, அன்பு செய்து சேவை புரிவார்கள் என்பது திண்ணம்' என்று எழுதி முடிக்கிறார். நமது இரண்டாவது கேள்விக்கும் பதில் கிடைத்துவிட்டது.

இப்படி இவர் சகோதரிகள் சபையையும் பள்ளிக்கூடத்தையும் நிறுவியதன் மூலம் என்ன பலனைக் கண்டார்? இந்த கேள்விக்கும் அதே கடிதத்தில் அவரிடமிருந்தே பதில்:

'இப்புதிய நிறுவனம் அநேகருக்கு ஆச்சரியத்தை அளித்தது. எனினும் பல வாரங்கள் பிள்ளைகள் ஒருவரும் பள்ளிக்கு வரவில்லை. சகோதரிகள் தனிமையாய் மன சோர்வின்றி இருந்தார்கள். இறுதியாய் ஒரு மாணவி வர அதைப் பார்த்து மற்ற பிள்ளைகளும் வந்தனர். காலத்தோடு தப்பெண்ணங்கள் மறைய, ஏற்பட்ட வெற்றியைக் கண்டு பொதுமக்களின் நல்ல அபிப்பிராயம் அதிகப்பட்டு வருகிறது.

'நல்ல குடும்பத்தினர் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் கல்வியின் பயனை மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

'கல்வியின் தேர்ச்சியால் பொது மக்கள் மத்தியில் நம்பிக்கை அதிகரிக்கிறது. சிறு செபங்களை அல்லது மறைக் கல்வியின் பதிலைக் கற்றுக் கொள்ள அவ்வளவு சிரமப்பட்ட பிள்ளைகள் இன்று கல்வியில் தேர்ச்சி பெற்று தங்கள் பெற்றோரை மகிழ்விக்கிறார்கள். போட்டி மனப்பான்மையில் ஆண் குழந்தைகள் தங்கள் சகோதரிகள் நன்கு படிப்பதைப் பார்த்து தாங்களும் நன்கு படிக்க ஆரம்பிக்கிறார்கள்.

'மேலும் கல்வி முன்னேற்றத்தால் பக்தியும் புதுப்பொலிவடைகிறது. குடும்ப ஜெபமும் தவறாமல் செய்யப்படுகிறது. புது நன்மை முஸ்திப்பு செய்வது எளிதாகவும், திருப்திகரமாகவும் இருக்கிறது. வாலிபப் பெண்களிடம் ஒழுக்கமும் உடுபாவனையில் அடக்க ஒடுக்கமும் காணப்படுகிறது. அருட்சாதனத்தை அடிக்கடி பெற தேடி வருகிறார்கள். கல்வி மட்டில் உள்ள ஆர்வம் சிறு கிராமங்களிலும் பரவி, பண்ணைகளில் வசிப்பவர்களும் தங்கள் பிள்ளைகளுக்கு கல்வி வேண்டும் என்று கேட்பதினால் இச்சபை தோன்றிய இடத்திலிருந்து சபையின் அங்கத்தினரை மற்ற இடங்களுக்குப் பிரித்து அனுப்ப வேண்டியதாயிற்று. மேலும் இடத்தையும் விசாலப்படுத்த வேண்டியதாயிற்று.'

இப்படி ஒன்றுக்கு ஒன்று உறுதுணையாக இருக்கும் வகையிலே சிறந்ததொரு ஏற்பாட்டினைச் செய்துவிட்டு, தனது எழுத்து மற்றும் பதிப்பகப் பணிகளை கவனித்திருக்கிறார். தனது சிந்தனைகளை எழுத்தில் பதிவு செய்ய வேண்டும் என்பதில் இவருக்கு அதிக ஆர்வம் இருந்தாலும் 'தலைவலி காரணமாயும் உடல் சுகமின்மையாலும் அதிகம் எழுத கூடவில்லை' என்றும், 'என் தலைவலி வேலைக்கு தடையாய் இருக்குமோவென்று அஞ்சுகிறேன்' என்றும் எழுதி ஆதங்கப்படுகிறார்.

துப்புய் அடிகளார் தனது நோயை மறக்க எழுத்து, மொழி பெயர்ப்பு, பதிப்பகம், அச்சகம் என்று முழு நேரமும் வேலையில் மூழ்கிக் கிடந்திருக்கிறார். இப்படியாக 19 ஆண்டுகள் ஓடிப்போய் இருக்கின்றன.

புதுச்சேரியில் அவர் வாழ்ந்த முப்பது ஆண்டுகளில் மீதம் இருந்த 11 ஆண்டுகாலம் கன்னியாஸ்திரிகளுக்கு பல கடிதங்கள் எழுதியிருக்கிறார். நமக்கு படிக்கக் கிடைத்திருக்கும் இந்த 38 கடிதங்களிலிருந்து 19-ஆம் நூற்றாண்டு மக்கள் தமிழ் எப்படி இருந்தது என்பதை உணர முடிகிறது. 18-ஆம் நூற்றாண்டு புதுச்சேரியின் மக்கள் தமிழை ஆனந்த ரங்கப்பிள்ளையின் நாட்குறிப்பு நமக்கு உணர்த்துவது போல. 29.10.1863 துவங்கி 11.05.1874 முடிய எழுதப்பட்ட இந்த 38 கடிதங்கள் புதுச்சேரியின் அரசியல், கலாச்சாரம், இலக்கியம், சரித்திரம், சமயம் ஆகியவற்றைப் பற்றிய பல செய்திகளை நமக்கு அள்ளி வழங்குகிறது.

துப்புய் அடிகளார் எழுதிய கடிதங்களோடு அவரது மற்ற நூல்களையும் ஆராய்ந்து பார்த்தால் மறைந்துபோன அல்லது மறைக்கப்பட்ட புதுச்சேரி வெளிச்சத்திற்கு வரலாம். மேலும் இக்கடிதங்களில் எழுதப்பட்டிருக்கும் பல செய்திகள் புதுச்சேரி வளர்ந்த வரலாற்றை சொல்லுபவை. துப்புய் அடிகளார் சிறந்ததொரு நிர்வாகி அடிகளார் சிறந்ததொரு நிர்வாகி என்பதும் இக்கடிதங்களின் மூலம்தெரிகிறது. புதுச்சேரி இலக்கிய மாமணிகளில் முக்கிய மணி இவர். (!)

அத்தியாயம் 12

# புரட்சிப்புயல் ஏமி கார்மைக்கேல்

முனைவர் ஜான்சி பால்ராஜ்,
ஆசிரியர் , திருநெல்வேலி

ஏழ்மையையும் அறியாமையையுமே மூலதனமாகக் கொண்டு நடைபெற்று வந்த, இந்தப் பெண் குழந்தை வேட்டை மெல்ல ஆட்டங்கண்டது. ஏமியின் தலைமையில் நடைபெற்ற விழிப்பணர்வு போராட்டம் பட்டித் தொட்டிகளுக்குள் நல்ல வேலைசெய்யத் தொடங்கியது.

ஆண்குழந்தை மோகத்தில் டசன் கணக்கில் பெற்றுத்தள்ளிய பெண் குழந்தைகளையும் தங்கள் விருப்பத்தையும் மீறி கருவில் உற்பத்தியாகிவிடும் குழந்தைகளையும் சொர்க்கத்தில் இடம் பெறுவதற்காக தேவதாசியர்களிடம் அற்ப விலைக்குக் கொடுக்கப்படவிருந்த குழந்தைகளை ஏமியின் கருணைக்கரங்கள் தடுத்தாட்கொண்டன.

தமிழகத்தைத் தாண்டி பிற மாநிலங்களில் இருந்தும் குழந்தைகளைப் பற்றின தகவல்கள் கடிதங்கள் மற்றும் தந்திகள் மூலம் வந்தன. வெளி மாநிலங்களில் கிறிஸ்தவ சமயப் பணியாளர்கள் மூலமாக இத்தகவல்கள் பரவின.

பெங்களூரில் ஒரு மருத்துவமனையிலிருந்து வந்த தகவலை வைத்து ஏமியும் பொன்னம்மாளும் புகைவண்டியில் சென்று மூன்று நாட்களில் குழந்தையை மீட்டு வந்தனர்.

சென்னையிலிருந்து வந்த தந்தி ஒன்றில், கொடுத்துவிட ஒரு குழந்தை என்று எழுதப்பட்டு வந்தது. விலாசமே இல்லாத அந்தத் தந்தியை எடுத்துக்கொண்டு அதில் இடப்பட்டிருந்த அஞ்சல் முத்திரையை மட்டுமே விலாசமாக வைத்து ஏமி விரைந்தார். குறிப்பிட்ட அந்த அஞ்சலகத்தில் விசாரித்து நான்கு நாட்களாக அலைந்து திரிந்து அந்தக் குழந்தையை தனது காப்பகத்தில் கொண்டு வந்து கிடத்தியப் பின்னர்தான் கண்ணீர் மல்க பெருமூச்சு விட்டார், ஏமி.

பெரு நகரங்களில் இருந்த மருத்துவமனைகளில் மருத்துவர்களின் உதவியோடு தனது பெண் குழந்தை மீட்பு பணியை பற்றியும் தன்னைத் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசத்தையும் எழுதி மருத்துவமனை சுவர்களில் ஒட்டி வைத்தார். பிரசவம் பார்க்கும் செவிலியர்களை எல்லாம் தனது உற்றத் தோழிகளாக்கிக் கொண்டார். பெண் குழந்தைகள் கோவில்களுக்கு கொடுக்கப்படும் செய்தி தெரிந்தால் உடனடியாக தனக்கு செய்தியனுப்பவும், தேவதாசி முறையைப் பற்றின சரியான புரிதலையும் அவர்களுக்குள் ஏற்படுத்தினார்.

அன்றைய காலகட்டங்களில் குழந்தைகள் தேவதாசிகளாக்குவதைப் பற்றின விசயம் சமூகத்தின் ஒரு முக்கிய சம்பவமாகவும் சமயச் சடங்காகவும் மக்கள் கூடும் இடங்களில் சுவையான பேசு பொருளாக இருந்து வந்தது. எனவே இத்தகைய குழந்தைகளைப் பற்றின தகவல்களை அறிய கோவில் பெண்களும் தரகர்களும் எல்லா இடங்களிலும் இருந்தனர்.

இவர்களிடையே ஏமியின் குழுவினரும் இப்போது ஊடுருவி தங்கள் காப்பகத்தை மக்களுக்கு அறிமுகம் செய்து குழந்தைகளைப் பற்றின தகவல்களைப் பெற்று வந்தனர். இவ்வாறு இருபெரும் சமூகப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் அதன் சலனங்கள் சமூகத்தின் பெரும் புள்ளிகளுக்குள் சலசலப்பை ஏற்படுத்தியது.

தேவதாசி முறையால் குளிர் காய்ந்தவர்கள் புழுக்கங்கண்டனர். வெளிப்பேச்சு இறைவனுக்கு அளிக்கப்படும் குழந்தைகள் என்றவகையில் இருந்தாலும் உண்மை எதுவென்ற, சமயச் சாயத்தை வெளுத்து வாங்கிய ஏமியின் சாதுரியம் மக்களை மெல்ல மெல்ல சிந்திக்க வைத்தது. நேரடியாகவே குழந்தைகளை ஏமியின் காப்பகத்திற்கு வந்து கொடுத்துச் சென்றனர். குழந்தைகளை வளர்க்க முடியாமல் திண்டாடிய பெற்றோர்களும் பசியின்றி உன்னோடு என் குழந்தைகள் இருக்கட்டும் தாயி.. என்று தாராளமாகக் கொடுத்துச் சென்றவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

நேரில் குழந்தைகளைக் கொண்டுவந்து கொடுக்க தயங்கியவர்கள் இரவோடு இரவாக பச்சிளங்குழந்தைகளை ஏமியின் காப்பகத்தின் அருகில் துணியால் பொதிந்து வைத்து

விட்டு சென்றவர்களும் உண்டு.

ஒரு சனிக்கிழமை அதிகாலை வேளையில் குழந்தையின் அழுகுரலும் காகங்களின் கரையும் சத்தமும் கேட்டு வெளியில் வந்த பொன்னம்மாளின் மகள் பரிபூரணம் … அடர்த்தியான துணி ஒன்றில் பொதியப்பட்டு கிடந்தது. சுற்றி குழுமி நின்ற காகங்களால் கொத்தப்படுவதற்கு தயாராகிக் கொண்டிருந்த அக்குழந்தையை கண்டு…. கொதித்து போனாள். அம்மா, அம்மா… என்று கதறியவள்… என்ன செய்வதென்றே தெரியாமல் இரண்டடி வீட்டை நோக்கி ஓடினாள்… காகத்தால் குழந்தை வீரிட்டு அழுது அழைக்க… செய்வதறியாமல் கதறியவள், காகங்களைத் துரத்தியபடி குழந்தையைச் சுற்றி சுற்றி வந்தாள். குழந்தை துணியிலிருந்து விலகி மண்ணில் விழுந்து கிடந்தது. பச்சிளம் குழந்தையை தூக்கி பழக்கமில்லாத அவள் குழந்தையின் உடல் முழுவதையும் தனது உடலால் மூடி கைகளை தரையில் ஊன்றி முழங்காலில் நின்று கொண்டு அம்மா… அம்மா.. என்று கூச்சலிட்டாள். யார் செவியையும் எட்டவல்லை அவள் அழுகுரல்.

காப்பகத்தை ஒட்டியிருந்த கிணற்றில் தண்ணீர் எடுக்க வந்த இரண்டு பெண்கள் அழுகுரல் கேட்டு ஓடி வந்தனர். அதில் ஒருத்தி குழந்தையை தூக்கிக் கொண்டாள். மற்றொருத்தி பரிபூரணத்தோடு சேர்ந்து ஓடினாள் காப்பகத்திற்குள்.

நடந்ததைக் கூறி முடிக்கும் முன் ஏமியும் பர்தாவும் ஓட்டோட்டமாய் வந்து சேர்ந்தனர். குழந்தை அந்தப் பெண்ணிடம் பால் குடித்துக் கொண்டிருந்தது. ஏமி குனிந்து அந்தக் குழந்தையைப் பார்த்தார். கண்ணோரம் காகத்தின் அலகு பதிந்திருந்தது.

தொடையிலும் காயங்கள் இருக்கும்மா என்றாள் அந்தப்பெண் குழந்தையின் காலை தடவியபடியே தொட்டுக் காட்டினாள். பசியில் வலிதெரியாமல் பால் குடித்த குழந்தை களைத்து கண்ணயர்ந்தது.

இப்படி, அவலங்களை உள்வாங்கியபடி குழந்தைகளின் எண்ணிக்கை மளமளவென அதிகரித்துக் கொண்டிருந்தது. ஒருசில மாதங்களுக்குள் 70 குழந்தைகளாகினர். தேவதாசிகளாக செல்லவிருந்த குழந்தைகளோடு கைவிடப்பட்ட குழந்தைகளும் சேர்ந்திருந்தனர். இவர்களை வளர்ப்பதில் தன்னோடிருந்த பெண்களின் உதவி அளவிட முடியாதது. பிறந்த ஓரிரு நாளே ஆன குழந்தைகள் முதல் உடல் ஊனமுற்ற குழந்தைகளும் பெற்றோரால் வளர்க்க இயலாமல் மரணத்தின் விளிம்பில் நின்ற குழந்தைகளுக்கும் ஏமியின் வசிப்பிடம் அன்புகாப்பகமாக இருந்தது.

குழந்தைகளை வயதுவாரியாக வளர்ப்பதற்கு ஏற்றவிதத்தில் அவர்கள் குடியிருந்த பகுதியைச் சுற்றின பெரும் பகுதியை உவாக்கரின் ஆலோசனையோடு நண்பர்களின் பண உதவிவியுடன் விலைக்கு வாங்கினார். குழந்தைகளுக்கு முக்கிய உணவான பாலுக்காக மாடுகளை வாங்கி அவற்றை பராமரிக்கும்பணி ஒருபுறம் நடந்து கொண்டிருந்தது. அதற்காக வேலையாட்களை நிரந்தரமாக்கி செயல்படுத்தினார். தனது இந்தியப் பணிகளைப் பற்றின ஒவ்வொரு விசயங்களையும் எழுதி அவற்றை நூலாக்கி தாய்நாட்டிற்கும் தான் சார்ந்திருந்த மிஷனெரி நிறுவனத்திற்கும் அனுப்பினார்.

தேவதாசி முறையைப் பற்றின தகவல்கள் பெரும் அதிர்ச்சியையும் வியப்பையும் அயல்நாட்டினரிடையே ஏற்படுத்தியதோடு அவருடைய பணிகளுக்காக நிறைய நண்பர்களிடமிருந்து உதவிகள் வரத் தொடங்கின. பணமாகவும் பொருட்களாகவும் மக்கள் தாராளமாக அனுப்பி உதவினர். பண உதவிகள் இல்லாமல் இங்கு எதுவும் செய்ய இயலாது. அத்தோடு குழந்தைகள் வளர்ப்பில் அதிகளவு சிரமங்கள் ஏற்பட்டன. குறிப்பாகத் தாய்ப்பால் இன்றி வெறும் மாட்டுப் பால் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்க இயலாமல் அடிக்கடி நோய்த்தாக்குதலுக்கு உள்ளாகினர். வயிற்றுப் போக்கு, சளி போன்ற தொற்றுகள் குழந்தைகளை மரணம் வரை இழுத்துச் சென்றன.

ஏமி குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் தாய்மார்களை எதிர்பார்த்தார். அருகாமை கிராமங்களில் சென்று பால் கொடுக்கும் இளந்தாய்மார்களோடு குழந்தைகளின் பரிதாப நிலையை எடுத்துப் பேசினார். ஆனால் சமூகத்தில் இது பெரும் எதிர்ப்புக்குள்ளாகி பிரச்சனைகள் ஏற்பட்டது. பால் கொடுக்க முன் வந்த பெண்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்களால் கடுமையாக எதிர்க்கப்பட்டனர். சாதிப் பாகுபாடும் தீண்டாமையும் தலைவிரித்தாடிய அக் காலகட்டத்தில் சாதியோ எவ்வித பேதமோ அறியாத அக்குழந்தைகளுக்கு பால் கொடுக்க பெண்களை அனுப்புவது பெருங்குற்றமாக பார்க்கப்பட்டது.

இதற்கிடையே இருபதாம் நூற்றாண்டு தொடக்க காலகட்டத்தில் பெருந்தொற்றான காலரா மக்களை ஈவு இரக்கமின்றி கொன்று குவித்திக் கொண்டிருந்தது. இந்தக் குழந்தைகளும் இந்நோய்க்கு எளிதாக இலக்காகி நின்றனர்.

ஒருமுறை டோனாவூரிலும் அதனைச் சுற்றிய கிராமங்களிலும் ஏற்பட்ட காலரா தொற்றினால் நூற்றுக் கணக்கில் மக்கள் இறந்து கொண்டிருந்தனர். ஏமியும் அவரது தோழியரும் அச்சத்தில் செய்வதறியாமல் மிரண்டு போயினர். சில குழந்தைகளைக் காப்பாற்ற முடியாமல் போனது. அன்றைய சூழலில் ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தபட்சம் ஓரிரு பால் கொடுக்கும் தாய்மார் இருந்தனர். அதிகளவிலான பிள்ளைப் பேரு மட்டுமல்ல ஒவ்வொரு குழந்தையும் குறைந்தபட்சம் ஆறு ஏழு வயதுவரை தாயிடம் பால் குடிக்கும் பழக்கம் இருந்ததுதான் இதற்கான காரணம்.

இருப்பினும் தாயின் முகம் பாராத இப்பச்சிளம் குழந்தைகளுக்கு அன்றைய மாடுகள் தான் இரக்கம் காட்டின. இதனால் குழந்தைகள் சிறிய வியாதிக்கும் தாக்குப் பிடிக்க இயலாமல் மரணத்தை தம் பிஞ்சு கரங்களால் அழைத்துக்கொண்டிருந்தன.

பிறந்து ஐந்து மாதங்களான பிரியா என்ற குழந்தை, தன் அழகால் அனைவரின் மனதிலும் இடம் பிடித்திருந்தாள். இவளும் காலரா கண்டு சில மணி நேரத்தில் கண்மூடி நிரந்தர

உறக்கத்திற்குச் சென்றாள். அடுத்தடுத்து இறப்பு விகிதம் ஒரே நாளில் மூன்று குழந்தைகள்.... ஏமி கதறினார். கிராமங்களின் முக்கு முடுக்கெல்லாம் சென்று ஒவ்வொரு வீட்டருகிலும் நின்று தன் குழந்தைகளுக்கு பால் தர வருமாறு கண்ணீர் வழிய கெஞ்சினார். உனக்கு அறிவு இருந்தா இப்படி எவனோ பெத்த பிள்ளைக்கு என் பொண்டாட்டிய பால் கொடுக்க கூப்பிடுவியா... போயிரு.... என்று வீட்டு வாசலில் நின்று கத்தினான் ஒருவன்.

என்ன சாதின்னே தெரியாத அனாதைகளுக்கு எம்பொண்ணை பால் கொடுக்க அனுப்புவதா... கொன்று விடுவேன் என்று கனைத்தான் மற்றொருவன். இவன் அவனைவிட மேல்சாதியானின் கால் செருப்பைத துடைத்து பிழைக்கும் ஒரு மானஸ்தன். எத்தனை பேரோடு போய் பெத்த பிள்ளைகளோ... அதுங்களுக்கு என் வீட்டு பொம்பளைங்க முலைக் கொடுப்பதா... ச்ச்சீ.... போ மூதேவி... என்று விரட்டினான், அடுத்தவன் பொண்டாட்டியோடு குடும்பம் நடத்தி நான்கைந்து பிள்ளைப் பெற்று குடியும் குடித்தனமுமாய் வாழ்ந்து கொண்டிருந்த யோக்கியனான இன்னொருவன்.

குடும்ப எதிர்ப்பையும் தாண்டி தாய்மையின் உந்துதலால் வீட்டிற்குத் தெரியாமல் ஏமியின் அன்பிற்காகவும் தாய்மையடையாமல் துடித்த அவரது தாயன்பின் கதறுதல் சில பெண்களைத் தொட்டது. அந்தப் பெண்கள் ஏமியின் வீட்டிற்குச் சென்று குழந்தைகளுக்கு பால் கொடுத்தனர். வறுமையில் வாடியப் பெண்களின் மார்பகங்கள் தான் அதிகளவில் இரக்கத்தோடு அதிகளவு பாலையும் சுரந்தளித்தன.

ஏமி அத்தகைய பெண்களுக்கு அவர்களது உடல் ஆரோக்கியத்திற்காகவும் குடும்பத்தின் வறுமையை நீக்கவும் சத்தான உணவுப் பொருட்களையும் பண உதவிகளையும் பெருமளவில் செய்தனுப்பினார்.

ஒருமுறை சீத்தா என்ற இருபத்தாறு வயது பெண் திருமணமாகி எட்டுவருடங்களுக்குப் பிறகு தவமிருந்து பெற்ற தனது இரண்டுவயது மகனைத் தூக்கிக் கொண்டு கணவனுக்குத் தெரியாமல் ஒருமுறையாவது தாயில்லா அந்தக் குழந்தைகளுக்கு பால் கொடுத்து விட வேண்டும் என்ற பேரன்பில் காப்பகத்திற்குச் சென்று வீட்டிற்குத் திரும்பினாள். இதைக் கேள்விப்பட்ட அவள் கணவன் தான் செய்துக் கொண்டிருந்த கூலிவேலையை பாதியிலேயே விட்டுவிட்டு அவளுக்காக வீட்டு வாசலில் காத்திருந்தான். கையில் அரிவாளோடு வெரித்தக் கண்களோடு அவள் வரும் வழியையே பார்த்திருந்தான். அவள் தலையில் தண்ணீர் பானையோடும் இடுப்பில் தன் மகனையும் சுமந்து கொண்டு வந்து கொண்டிருந்தாள். வெளி வாசலுக்கு வந்து மகனை இறக்கி விட்டாள். அப்பா... என்று ஓடிவந்த மகனை வீட்டிற்குள் தள்ளி கதவடைத்தவன்.... நீ வீட்டிற்குள் கால் வைத்தால் வெட்டுவேன் வராதே போயிரு.... எங்க போய் உன் முந்தியை வெலக்கிக் காட்டினியோ அங்கையே போயிரு... இனி உனக்கும் இந்த வீட்டிற்கும் சம்பந்தமில்லை என்றான். அவள் நான் என்ன செய்தேன்... என்று அப்பாவியாய் பார்க்க, கோபம் தாளாமல் ஓடி சென்று அவள் வயிற்றில் எட்டி மிதித்தான்.



அவள் கதறியபடி தண்ணீர் பானையோடு மல்லாக்கவிழுந்தாள். தலையில் பலத்த அடி இரத்தம் வடிய கதறினாள்... வேடிக்கைப் பார்த்த ஒருவரும் அவளை நெருங்கவிடாமல் அரிவாளை காட்டி மிரட்டினான். அவள் சாகட்டும்... சாகட்டும் என்று கத்தினான்.... உதவியற்று மயங்கி கிடந்த அவளைப் பற்றின செய்தி சில மணிநேரம் கழித்து தான் ஏமிக்கு எட்டியது.

ஏமி உதவியாளர்களோடு முதலுதவிப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு அந்த ஊரை வந்து சேர்ந்தார். அவளது வீட்டைத்தேடி விசாரித்துக்கொண்டிருக்க, அவ்வூரில் இருந்த கிறித்தவ குடும்பத்தில் ஒரு பெண், அம்மா, அந்தப் பெண் மாடு துரத்தியதில் கீழே விழுந்து செத்துப் போனதா கொஞ்சம் முன்புதான் என் வீட்டிற்க்கு ஆள்சொல்லி விட்டான் அவள் புருசன்.

நாங்களும் பதறியடித்து ஓடினோம் பாதிவழியில் அவன் அந்தப் பெண்ணைக் கொன்றான் என்ற உண்மை செய்தி கிடைத்தது திரும்பி வந்து விட்டோம். நீங்கள் அங்கு இப்போது போவது சரியா தோணல. அவன் மூர்க்க வெரியன். சாதிப் பேய் பிடித்தவன். நாங்கள் ஏசுவை ஏற்ற காலத்திலிருந்தே எங்களோடு நல்லது கெட்டது என்று எந்த காரியத்திற்கும் அவன் குடும்பத்திலிருந்து ஒருவரும் வர மாட்டாவ. இத்தனைக்கும் அவன் இரண்டாம் சொக்காரன் எங்களுக்கு... என்றாள் தலையை குனிந்தவாறே.

ஏமி செய்வதறியாது திகைத்து நின்றார். வாங்க

அம்மா...உள்ளே எல்லோரும் வாங்க என்று வீட்டிற்குள் அழைத்துப்போனாள், அந்தப் பெண்.

நடைப்பிணமாய் நடந்து உள்ளே சென்ற ஏமி... இதை இப்படியே விட்டால் இவன் இன்னும் எதை வேண்டுமென்றாலும் செய்யத் துணிவான். எனக்குத் தெரிந்த வக்கீல் ஒருவர் இருக்கிறார். அவர் மூலம் இதைக் காவல் துறைக்கு தெரிவிப்போம் என்றார் ஏமி.

நீங்கள் நினைப்பதை போல் இல்லையம்மா . இந்த ஊரில் எவ்வளவு பெரிய கொலைகளையும் தற்கொலைகளையும் ஊரார் ஒன்று சேர்ந்து மறைத்து விடுவார்கள். இதுவரை எந்த பிரச்சனைகளும் வெளியில் தெரிந்ததேயில்லை. கொலை செய்தவனுக்கும் ஊர்கட்டுப்பாட்டிற்கும் ஊர்சனங்க அடங்கிதான் வாழ்ந்தாகனும். நீங்க வேற யார் கண்ணுக்கும் தெரியாமல் இப்போதைக்கு வீடுபோய் சேருங்க. நாங்க நாளை அங்கு வருகிறோம். என்றான் அவள் கணவன் கோயில்பிள்ளை.

ஊருக்கு வெளியில் நிறுத்தப்பட்டிருந்த வண்டிவரை நடந்து சென்றனர். ஏமியின் நடை தளர்ந்துகொண்டே வந்தது. வண்டியில் ஏறுமளவு உடலில் தெம்பு இல்லை என்பதை உணர்ந்து கொண்டு நடுவழியில் கீழே தரையில் உட்கார்ந்தார்.

பொன்னம்மாள்

அம்மா...அம்மா..என்று முகத்தைத் தட்டினார். அதிர்ச்சியில் மயக்கமானார் ஏமி. அச்சமும், எதிர்காலத்தில் தனது குழந்தைகளின் நிலமை, இந்தச் சமுதாயத்தின் கட்டமைப்பு, .... என்று எல்லாவற்றையும் நினைத்து நினைத்து என்ன செய்வதென்ற கவலையினால்... பதட்டமாகி திகைத்த ஏமியின் மனச் சோர்வை தாங்க இயலாமல் அவரது உடல் தன்னிலை இழந்து மயக்கமானது. அவசர அவரசரமாக முகத்தில் தண்ணீர் தெளித்தனர். குளிர்காற்று முகத்தில் மோத.... முருகம்மாள்... முருகம்மாள்... என்று ஏமியின் நாவுகள் இறந்துபோன அந்தப் பாசப் பெண்ணின் பெயரை உச்சரித்தன. எல்லோர் கண்களிலும் கண்ணீர் வழிந்தோடியது. வாங்கம்மா போயிருவோம்... என்றாள் அழுது கொண்டே தேவாயி.

அந்தப்பெண் நான் கொடுத்த உதவித்தொகையை கூட வாங்க மறுத்துவிட்டாள். தாயில்லாத பிள்ளைக்கு பால் கொடுப்பது சாமிக்கு பாலூட்டுவதற்குச் சமம் என்று சொல்லிட்டு அவள் மகனை தூக்கி இடுப்பில் வைத்துகொண்டு நடந்து போன அந்தக் காட்சியே என் கண்ணில் தெரியுது.... என்ற ஏமி கட்டுப்படுத்த முடியாமல் குலுங்கி குலுங்கி அழ, ஏமியின் கண்ணீரை பார்த்த பொன்னம்மாளும் கதறி அழத்தொடங்கினாள்.

வண்டிகாரன் பிச்சமுத்து அம்மா... நாம் கிளம்புவோம்.. இனி இங்கே நின்றால் பேராபத்து என்றபடி வண்டியை நெருங்கினான்...கண்ணீரைத் துடைத்தபடியே.!

அடுத்த நாள் பால் கொடுக்கவரும் தாய்மார்களின் எண்ணிக்கை பாதிக்குமேல் குறைந்து போனது. முருகம்மாளின் மரணத்திற்கான உண்மை காரணம் ஒரே நாளில் எல்லா இடங்களிலும் வேகமாக பரவியிருந்தது.

**தொடரும் தாய்மை!**


கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**வங்கி விபரம்**

Name: Tinnevelly Christian Historical Society

A/c Number : 1748 020000 3684

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Tinnevelly Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்



**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
tchsportal.co.in

christianhistorical@gmail.com

# மணிமுத்தாறு திருச்சபை வரலாறு

J.ஜான் ஞானராஜ்,
ஆசிரியர், திருநெல்வேலி

### அமைவிடம்

திருநெல்வேலியில் இருந்து மேற்கே சுமார் 40 கிலோ மீட்டர் தொலைவில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் மணிமுத்தாறு அமைந்துள்ளது. திருநெல்வேலியில் இருந்து பாபநாசம் செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள கல்லிடைக்குறிச்சி நகரில் இருந்து சுமார் 6 கிலோ மீட்டர் தொலைவில் மணிமுத்தாறு காணப்படுகிறது. மணிமுத்தாறில் இருந்து 20 கிலோமீட்டர் தொலைவில் மாஞ்சோலையும் அங்கிருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் கோதையாரும் உள்ளது. மாஞ்சோலையைச் சுற்றி ஐந்து இடங்களில் BBTC தேயிலை எஸ்டேட்டுகள் உள்ளன. கோதையாரில் பெரியதோர் அணைக்கட்டு உள்ளது.

### பெயர் காரணம்

தாமிரபரணி ஆற்றின் துணை ஆறுகளில் பெரியதும் நீர் வளம் மிக்கதுமான ஆறு மணிமுத்தாறு ஆகும். அந்தப் பெயரே இந்த கிராமத்தின் பெயராகக் காணப்படுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் இந்த ஆறு மணிமுத்தாறில் இருந்து ஐந்து கிலோ மீட்டர் வடக்கு நோக்கி கடந்து கல்லிடைக்குறிச்சியின் மேற்கு எல்லையில் தாமிரபரணி ஆற்றில் கலந்து விடுகிறது. இவ்வாறு இரு ஆறுகளும் ஒன்று சேரும் இடத்தில் கன்னடியன் அணைக்கட்டு எனும் தடுப்பணை 13 ஆம் நூற்றாண்டில் கன்னடிய ஹொய்சாள அரசரால் கட்டப்பட்டுள்ளது. இதுவே தாமிரபரணி ஆற்றில் கட்டப்பட்ட முதல் பழங்கால அணைக்கட்டு.

### ஊரின் தோற்றம்

இரு போகம் நெல் விளையும் விவசாய நிலங்களைக் கொண்டதாக இருந்த இவ்வூரில் மணிமுத்தாறு ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கான தொடக்கப் பணிகள் 1950 முதல் தொடங்கப்பட்டது. பொதுப்பணித்துறை பொறியாளர்கள் இங்கு தங்கியிருந்து தொடக்கப் பணிகளை செய்து வந்தனர். அவர்கள் மூலமாகவே இந்த ஊர் தோற்றம் பெற்றது.

### நிதிநிலை காரணமாக காலதாமதமான கட்டுமானப் பணி

நிதிநிலை காரணமாக கட்டுமான பணிகள் உடனடியாக தொடங்கப்படவில்லை. அக்காலத்தில் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த திரு.K.T கோசல்ராம் அவர்களின் தீவிர முயற்சி மற்றும் அன்னார் பிரித்துக் கொடுத்த பணம் காரணமாக மணிமுத்தாறு அணை கட்டுமான பணிகள் 1958 இல் வேகமாக நடைபெற்றது.



### அணை கட்டுமான பணிக்காக மணிமுத்தாறுக்கு வந்த கிறிஸ்தவக் கட்டுமானப் பொறியாளர்கள்

அணை கட்டுமானத் தொடக்கப் பணிக்காக வந்த என்ஜினியர்களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவர்களாக இருந்ததே இங்கு சபையும் தேவாலயமும் உருவாக முக்கிய காரணமாக இருந்தது.

முக்கிய பொறுப்பில் இருந்த கட்டுமானப் பொறியாளர்களான சாலமோன் , ஆர்தர் சாமுவேல், சந்தோஷம், பாலசிங் தாகூர் ஆகியோரும் Work Inspector இராஜாப்பிள்ளை ஆகிய ஐவரும் மணிமுத்தாறு திருச்சபையும் தேவாலயமும் தோன்ற அரும்பாடு பட்டவர்கள். முதலில் ஆராதனைக் குழுவாக ஜெபம் நடத்தப்பட்டது பின்னர் பொதுப்பணித்துறை மூலம் முறைப்படி தேவாலயத்திற்கான இடத்தை பெற்ற இவர்கள் உடனடியாக தேவாலயம் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

### கிறிஸ்தவ பொறியாளர்கள் சேகர குருவானவரை அணுகுதல்

மணிமுத்தாறு அணை கட்டுமான தொடக்கப் பணிக்காக மணிமுத்தாறில் குடும்பமாய் தங்கி வசித்து வந்த கிறிஸ்தவ பொறியாளர்கள் 1950 இல் அம்பாசமுத்திரத்தில் இருந்த சேகர குருவானவர் அவர்களது இல்லத்திற்கு சென்று நேரில் சந்தித்து மணிமுத்தாறில் ஆராதனை நடத்த சபை ஊழியரை அனுப்ப வேண்டினர்.

1947-1950 வரை கல்லிடைக்குறிச்சியில் சபை ஊழியராக பணி செய்து வந்தவரும் அதே ஊரை சொந்தமாகக் கொண்டவருமான திரு.V.காலேப் யோசுவா உபதேசியார் அவர்களை 1950 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சபை ஊழியராக அம்பாசமுத்திரம் சேகர குருவானவர் அவர்கள் நியமித்தார்கள். அக்காலத்தில் கல்லிடைக்குறிச்சி சபை அம்பாசமுத்திரம் சேகரத்துக்கு உட்பட்ட சபையாகவே இருந்து வந்தது. ஞாயிறு தோறும் ஜெப ஆராதனை பொறியாளர் திரு. சந்தோஷம் அவர்கள் வீட்டில் நடைபெற்றது.

### திருமண்டல நிர்வாக கமிற்றி அறிக்கையில் மணிமுத்தாறு

1952 - 1953 ஆம் ஆண்டுக்கான திருநெல்வேலி திருமண்டல நிர்வாகக் கமிற்றி அறிக்கையில் மணிமுத்தாறு திருச்சபை குறித்து பதிவு செய்யப்பட்டுள்ளது. மணிமுத்தாறு திருச்சபையில் ஆராதனை, திருவிருந்து ஆராதனை

நடைபெற்று வருவது குறித்தும் மணிமுத்தாறு சபை திருநெல்வேலி திருமண்டல நிர்வாக கமிட்டியால் சபையாக அங்கீகரிக்கப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளது குறித்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### அரசு பள்ளியில் நடந்த தேவாலய ஆராதனை

மணிமுத்தாறு அணை கட்டுமானப் பணிக்கு ஏராளமான தொழிலாளர்கள் குடும்பமாக மணிமுத்தாறில் தங்கியிருந்தபடியால் அவர்களது பிள்ளைகள் கல்வி கற்கும் படியாக மணிமுத்தாரில் தமிழ்நாடு அரசு சார்பில் நடுநிலைப்பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அரசு திருநெல்வேலி திருமண்டல பேராயரை அணுகி திருமண்டல ஆசிரியர்களை அந்த பள்ளியில் நியமித்து அந்தப் பள்ளியை நடத்தித் தர கேட்டுக் கொண்டதால் சில ஆண்டுகள் திருநெல்வேலி திருமண்டல ஆசிரியர்கள் இந்த பள்ளியை நடத்தினர். அக்காலத்தில் தேவாலய ஆராதனை அரசு நடுநிலைப் பள்ளியில் நடைபெற்றது.

### புதிய இடத்தில் தேவாலயம்

கிறிஸ்தவ பொறியாளர்கள் பொதுப்பணித்துறை மூலம் தேவாலயம் கட்டுவதற்கு இடம் அளிக்க கோரி வேண்டிக் கொண்டதன் அடிப்படையில் தற்போது தேவாலயம் அமைந்திருக்கிற அந்த வளாகம் முழுவதும் திருமண்டலத்திற்கு கொடுக்கப்பட்டது. அந்த இடத்தில் 1965 இல் தேவாலய கட்டுமானப் பணி தொடங்கியது. கட்டுமானப் பணியை மேற்பார்வை செய்யும் பொறுப்பாளராக Work Inspector ராஜாப்பிள்ளை அவர்கள் இருந்தார்கள். தொடக்கத்தில் கட்டுமான பணியில் தொய்வு காணப்பட்டது. பின்னர் கட்டுமானப் பணி வேகம் எடுத்தது கட்டுமான பணிகள் நிறைவுற்ற பின் பிரதிஷ்டை செய்யப்படாமலேயே தேவாலயத்தில் ஆராதனைகள் நடைபெற்று வந்தது. அந்த காலகட்டத்தில் மணிமுத்தாறு சிறப்பு காவல் படை பிரிவின் கமாண்டர் ரைமண்ட் ஜோசப், திருமதி. குனரஞ்சிதம் அம்மாள், டாக்டர். சாக்கோ ஆகியோர் சபையின் முக்கியஸ்தர்களாக இருந்தனர்.

### இடைக்கால சபை ஊழியர்கள்

திரு.சாக்கோ, திரு.V.A.நேசமணி, திரு.பாஸ்கரன், திரு.பால்துரை ஆகியோர் இடைக்காலத்தில் இங்கு சபை ஊழியராகப் பணி செய்தனர்.

### தேவாலய பிரதிஷ்டை

மேற்கூறையாக ஒடு போட்ட சிறிய அளவிலான தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்படாமல் ஆராதனை நடத்தப்பட்டு வந்த நிலையில் நீண்ட காலம் இருந்ததால் சபை மக்கள் மற்றும் சேகர குருவானவரின் வேண்டுகோளின் படி 28.02.1987 அன்று சபை ஊழியர் திரு பால்துரை, சேகர குருவானவர் அருள்திரு.பிரட்ரிக் ரத்தினராஜ் ஐயரவர்கள் முன்னிலையில் நெல்லை பேராயர் மகாகனம் ஜேசன் S. தர்மராஜ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### தேவாலய முன் மண்டபமும் கோபுரமும் கட்டப்படுதல்

1987 முதல் 2003 வரை சபை ஊழியராகப் பணி செய்து வந்த திரு.D. ஜாண் ஜேக்கப் H.M. அவர்களது பணிக்காலத்தில் அன்னாரின் முயற்சியால் சபையாரின் ஒத்துழைப்புடன் சிறிய அளவில் கட்டப்பட்டிருந்த தேவாலயத்திற்கு முன்பாக சிறப்பானதொரு முன் மண்டபமும் முன் மண்டபத்தின் மேல் இரண்டு தட்டுகள் கொண்ட கோபுரமும் கட்டப்பட்டது. கோபுரம் கட்டப்பட்டவுடன் வெண்கல நாக்கு மணியும் உடனே அமைக்கப்பட்டது. அதே காலகட்டத்தில் கல்லிடைக்குறிச்சி சபையைச் சார்ந்த திரு.T. ஜெயராஜ் அவர்களால் தேவாலயத்திற்கு ஒலிபெருக்கி வசதி செய்து கொடுக்கப்பட்டது.

### தேவாலய காம்பவுண்ட் சுவர்

2003 முதல் 2006 வரை சபை ஊழியராகப் பணி செய்த திரு I.தேவராஜ் அவர்களது பணிக்காலத்தில் ஆலய வளாகத்தை சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டது.

### கிரானைட் தளமும் ஜெனரேட்டர் வசதியும்

2006 முதல் 2012 ஜனவரி வரை சபை ஊழியராக பணி செய்த திரு. டேவிட் ஞானசிகாமணி அவர்களது பணி காலத்தில் ஆலய தரைதளம் கிரானைட் தளமாக்கப்பட்டது. 12 K.W. ஜெனரேட்டர் வசதி ஏற்படுத்தப்பட்டது.

### ஆவிக்குரிய வளர்ச்சி

2013 ஜனவரி முதல் 2017 வரை சபை ஊழியராக பணி செய்த திரு. சாம்ராஜ் அவர்களது பணி காலத்தில் முழு இரவு ஜெபம், உபவாச ஜெபம் தொடங்கப்பட்டது. ஜெபக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டது. தனிநபர் சுவிசேஷம் நடைபெற்றது. ஆவிக்குரிய வளர்ச்சியில் சபை உயர்வு பெற்றது.

### அரசு பணியாளர்களுக்கும் பிறருக்கும் ஆசீர்வாதமாக நிற்கும் தேவாலயம்

மணிமுத்தாறு அணை கட்டுமான பணிக்காக வருகை தந்தவர்களின் ஆன்மீக தேவைக்காக தேவாலயம் கட்டப்பட்ட போதிலும் மணிமுத்தாறில் வனத்துறை, மீன்வளத்துறை என பல்வேறு அரசு சார்ந்த அலுவலகங்கள் வரத் தொடங்கின. தமிழ்நாடு காவல்துறையின் சிறப்புக் காவல் படைப் பிரிவு (Special Police) மணிமுத்தாறில் செயல்பட்டு வருகிறது. அரசு ஊழியர்கள், ஆண் மற்றும் பெண் காவலர்கள் என அனைவருக்கும் பிறருக்கும் மணிமுத்தாறு தேவாலயம் ஆசீர்வாதத்தின் ஊற்றாக திகழ்ந்து வருகிறது.

### புதிய தேவாலய கட்டுமான தொடக்க பணிகள்

தேவாலய மேற்கூரை மற்றும் பக்கச்சுவர்கள் பழுதடைந்த நிலையில் தேவாலயத்தை முற்றிலுமாக அகற்றி விட்டு புதிய தேவாலயம் கட்டுவதற்கான முன் முயற்சிகளை கல்லிடைக்குறிச்சி சேகர குருவானவர் அருள்திரு.P.D. முத்துராஜ் ஐயரவர்கள் மற்றும் சபை மக்கள் சிறப்பாக செய்து வருகிறார்கள்.

# நற்செய்தி பணியின் தேவையும் அணுகு முறைகளும்

**நெல்லை ஜெஸி மணாளன்**
கோயம்புத்தூர்

21-ம் நூற்றாண்டின் மூன்றாவது பத்தாண்டுகளில் பயணித்து கொண்டிருக்கும் நமக்கு, நமது இந்தியத் திருநாட்டில், நற்செய்தி பணியின் தேவை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகமாக தேவை. அது மட்டுமல்லாமல், நாம் வழக்கமாக செய்து வரும் முறைமைகளையும், (Procedures) அணுகுமுறைகளையும் (Strategies) மாற்ற வேண்டியதும் அவசியமாக இருக்கிறது.

ஆனால் வேடிக்கை, இல்லை இல்லை, வேதனை என்னவென்றால், இதனைப் பற்றிய எந்தவொரு சிந்தனையும் இல்லாமல், சுரணையும் இல்லாமல் கண்ணயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் மந்தமான, மாந்தமான மன நிலையிலேயே இந்தியக் கிறிஸ்தவர்கள் உள்ளனர். அதிலும், குறிப்பாக முன்னணி தலைவர்கள் மற்றும் வெகு ஜனப் பிரசங்கிகள், பணமயக்கத்தில், புகழ் போதையில், செழிப்பு உபதேசத்தில் உவகை கொண்டு அல்லது ஆராதனை அலப்பறைகளில் ஆடிப்பாடிக் கொண்டு, திரிபு உபதேசத்தில் திளைத்துக் கொண்டு, கண் சொருகிப் போன குருடர்களாக இருக்கின்றனர். நிலவரம் இப்படியாக இருக்கும் போது இவர்கள் எப்படி, தங்களின் கீழுள்ள மந்தையை ஒழுங்காக மேய்க்க முடியும்? ஆக, சராசரி கிறிஸ்தவர்கள், முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்களைப் போல, வசனத்தைக் கேட்கிறவர்களாக இருந்தாலும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவர்கள் பலனற்று போய், சோம்பலும் சோர்வும் கொண்டிருக்கும் மனநிலையில் முன்னேற்றமின்றி முடங்கிக் கிடக்கிறார்கள். இவைகளை எல்லாம் முன்னறிந்த கடவுள் ஏசாயா 59 -ம் அதிகாரத்தில் தீர்க்கதரிசனமாக உரைத்தது போன்றே தெரிகின்றது. அதில் 10-வசனம் இப்படியாகத்தான் சொல்கிறது.

**'நாங்கள் குருடரைபோல் சுவரைப் பிடித்து, கண்ணில்லாதவர்களைப்போல் தடவுகிறோம்; இரவில் இடறுகிறது போலப் பட்டப்பகலிலும் இடறுகிறோம்; செத்தவர்களைப்போல் பாழிடங்களில் இருக்கிறோம்'.**

ஆம் நண்பர்களே இது தான் இன்றைய இந்தியக் கிறிஸ்தவ நிலை. இதனை நாம் எப்போதாவது சிந்திக்கிறோமா? செயல்படத் திட்டங்கள், இலக்குகள் வகுக்கிறோமா? ஊழியர், உறுப்பினர், போதகர், விசுவாசி, ஆயர், அங்கத்தினர், என்று எந்த பாகுபாடும் பார்க்காமல் ஒவ்வொரு உண்மைக் கிறிஸ்தவர்களும் ஓய்வின்றி தேவ ராஜ்யம் கட்டப்பட உழைக்க வேண்டும். தேவ ராஜ்யம் என்றாலே இன்றைக்கு ஊழியங்கள் மற்றும் ஊழியர்களின் அலுவலகங்கள் அல்லது ஆராதனைக் கூடங்கள் என்று தப்பர்த்தம் கொண்டு விடுகிறார்கள். அது மட்டுமல்லாமல், அவர்களைச் சார்ந்த, நம்புகிற அப்பாவி விசுவாசிகளையும் அவ்விதமாகவே பொருள்கொள்ள பழக்குவிக்கிறார்கள். இது தான் வேதனையின் உச்சக்கட்டம். நமது நிலைகளை உணர வேண்டும், உணர்த்த வேண்டும் எனும் நோக்கில் சற்றே கடுமையான வார்த்தைகளை பயன்படுத்த வேண்டியதாயிற்று என்று நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன், தோழமைகளே. அதனைத் தொடர்ந்து சில நடைமுறை ஊழிய செயல் திட்டங்களை இங்கே விளக்கிட விரும்புகிறேன்.

**1. அந்நாளைய மிஷனரிகளின், வரலாறுகளைத் தேடிப்பிடித்து வாசிக்க வேண்டும். அது போன்ற நேரடிப் இடங்களை அல்லது குறைந்த பட்சமாக ஆன்லைன் நிகழ்வுகளையாவது பார்க்க, பங்கேற்க முயல வேண்டும்.**

**2. அருட்பணியாளர்கள்/ மிஷனரிகளின் வாழ்ந்த இடங்கள், கல்லறைகளைத் தேடிப்பிடித்து, அவர்களின் தியாக வாழ்க்கையை நம் தலைமுறைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.**

**3. திருச்சபையாக, இது போன்ற ஊழிய தளங்களை பார்வையிட முன்முயற்சி எடுக்க வேண்டும்.**

**4. உலக வேலையில் உள்ளவர்கள் அந்தப் பணியில் இருந்து கொண்டே, கிறிஸ்துவின் நாமத்திற்கு சாட்சியாக வாழ வேண்டும்.**

**5. அரசுப் பணியோ அல்லது வேறெந்த பணியாக இருந்தாலும், பணி கிடைத்த இடத்திலே இருந்து கொண்டு, சொந்த ஊர் அல்லது மாவட்டங்களுக்கு வராது, இருக்கின்ற ஊர்களில், நற்செய்தி விரிவாக்கப் பணிகளில் ஈடுபடலாம்.**

**6. இருக்கின்ற ஊர்களில், நமது வீட்டை திறந்த இல்லமாக வைத்து, திருச்சபை ஊழியங்கள் மற்றும் மாணவர்கள் கல்வி ஆலோசனை மற்றும் குடும்ப ஆலோசனை தன்னார்வ மையங்களாக செயல்படலாம்.**

**7. பண வசூலை பிரதானப்படுத்தி, செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களையும், பிரமாண்டமான விளம்பரங்கள் மூலம், நேரடி அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் நடத்தப்படும், உபவாச, தீர்க்கதரிசன ஜெபங்கள், மாநாடுகளைத் தவிர்த்து, புறந்தள்ளி, ஒதுக்கி விட்டு, மத்தேயு 6:6-ல் சொல்லப்பட்ட, தனிப்பட்ட ஜெபம், அந்தரங்க ஜெபங்கள், ஒவ்வொரு கிறிஸ்தவர்கள் வாழ்விலும் பெருக வேண்டும்.**

அப்படியாக செய்து வரும் போது, ஏசாயா 42:16-ல் உள்ள வசனத்தின் படி கடவுள் நமது கிறிஸ்தவர்களை, குடும்பங்களை, திருச்சபைகளை ஆசீர்வதிக்க முடியும் என்பது என் தெளிவான பார்வை. அந்த வாக்குத்தத்தை வாசித்து இந்தக் கட்டுரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

**குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி, அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக் கொண்டு வந்து, அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையுமாக்குவேன்; இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து, அவர்களைக் கைவிடாதிருப்பேன். (ஏசாயா 42:16)**



# Gomathi Thanga Maligai



*14-7-6(1), Bus Stand Road, Surandai-627859*
*Tenkasi (Dt)*

Cell : 94435 55940 Ph: 04633-2611340

SHOP NOW


Return Requested:

Tamil Printed Book- For Private Cirulation Only

To


**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**



Owned & Published By TINNEVELLY CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401